விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 புரட்டாதி 1 ஜுலைஜ் 20 இதழ் 215
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 17-9-84

## மீனம்பாக்கம்குண்டுவெடிப்பு:

### இலங்கையில் விசாரணை ஆரம்பம்!
### ஒருமாதத்தில் குற்றப்பத்திரிகைதாக்கலாகும்

(சென்னை)

மீனம்பாக்கம் குண்டுவெடிப்புச் சம்பவம்குறித்து புலன் விசாரணைகள் இலங்கையில் ஆரம்பமாகியுள்ளன.

இத்தகவலைத் தமிழக பொலிஸ் உயர் அதிகாரியான திரு மோகன்தாஸ் தெரிவித்தார்.

இந்தியாவில் அக் குண்டு வெடிப்புச் சம்பந்தப்பட்ட புலன் விசாரணைகளில் பெரும்பகுதி பூர்த்தியாகிவிட்டது என்று, கூறிய அவர். இலங்கையில் அதுபற்றிய விசாரணைகள் தற்போது ஆரம்பமாகியுள்ளது. என்றுர்.

இலங்கை விசாரணைகளில் இந்திய அதிகாரிகள் மட்டுமே தனியாக ஈடுபடுவார்கள். இவர்களுக்கு இலங்கையின் உதவிகள் வழங்கப்படுமாயினும், இலங்கை அதிகாரிகள் இவற்றில் ஈடுபடுத்தப்படமாட்டார்கள் என்றே தெரிய வருகின்றது.

இன்னும் ஒருமாத காலத்தில் மீனம்பாக்கம் சம்பவம் தொடர்பான குற்றப் பத்திரிகைகள் தாக்கலாகுமென்றும் திரு. மோகன்தாஸ் கூறினார்.

### இன்று ஓய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி தபாலகங்கள் மூலம் ஓய்வூதியம் பெற்றவர்களுக்கு யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இன்று காலை ஓய்வூதியம் வழங்கப்படும். (க)

# "காந்தியைப்பின்பற்றியிருந்தால் வெற்றி கிடைத்திருக்கும்!"

## பயங்கரவாதிகள் பற்றி ஜனதிபதி கருத்து

(இ. கந்தசாமி)

''பயங்கரவாதிகள் மகாத்மா காந்தியின் வழியைப் பின்பற்றியிருந்தால் அவர்களது இலட்சியத்தில் வெற்றி நிச்சயம் கிடைத்திருக்கும். அதே நேரத்தில் அவர்களை எதிர்கொள்ள எனக்கும் பல சிரமங்கள் ஏற்பட்டிருக்கும்.''

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 28-வது மகாநாட்டில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நேற்று உரையாற்றுகையில் ஜனதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், ''நான் காந்தியக் கொள்கைகளைப் பின்பற்றுபவன். 1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தலிலும் நான் காந்திய வழியைப் பின்பற்றியே வெற்றிபெற்றுள்ளேன்'' என்றுர்.

ஜனதிபதி மேலும் கூறியதாவது:- ''அரசாங்கத்திலுள்ள அமைச்சர்களில் எனது நம்பிக்கைக்குரியவர்களில் அமைச்சர் தொண்டமானும் ஒருவர். அமைச்சர் இராசதுரையும் அவ்வாறே. அவர்களிருவரும்

[8-ம் பக்கம் பார்க்க]

## அமைச்சர், பிரிகேடியருடன் யாழ். அரச அதிபர் தொடர்பு

(யாழ்ப்பாணம்)

கரணவாய் வடக்கில் நேற்று முன்தினமிரவு நிகழ்ந்த சம்பவம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு யாழ் மாவட்ட இணைப்பு அதிகாரி பிரிகேடியர் நளின் செனிவிரத்னவை, யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் கேட்டுள்ளார்.

கரணவாய் வடக்கில் நிகழ்ந்த சம்பவம் பற்றியும் இதன் காரணமாக ஓர் இளம் கர்ப்பிணிப் பெண் பலியானது குறித்தும் பிரிகேடியரிடம் யாழ். அரசாங்க அதிபர் நேற்றுக் காலை தெரிவித்து, இது சம்பந்தமாக உரிய நட

(8-ம் பக்கம் பார்க்க)

## மீண்டும் ராமராவ்

[ஹைதராபாத்]

ஆந்திரப் பிரதேசத்தின் முதலமைச்சராக திரு. என். டி. ராமராவ் நேற்று மீண்டும் பதவியேற்றுள்ளார்!

[8-ம் பக்கம் பார்க்க]

## நள்ளிரவில் விழுந்த குண்டு! கர்ப்பிணி துடிதுடித்துமரணம்

[யாழ்ப்பாணம்]

குண்டு வீச்சுக்கு வீட்டில் கணவனுடன் நித்திரை செய்து கொண்டிருந்த 19 வயது அழகிய இளம் கர்ப்பிணிப் பெண் பலியானர்.

கணவன் படுகாயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரணவாய் வடக்கு குமுளம் கூட்டல் பகுதியில் கொத்தாவத்தை என்ற இடத்தில் சப்பாத்து தொழிலாளியான நல்லதம்பி தங்கத்துரை [வயது 23] தங்கத்துரை கலாவதி [வயது 19] பலியான குடிசை வீட்டில் படுத்திருந்த போதே இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு சுமார் 11-45 மணியளவில் நடந்துள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

## சிறுவர்கள் மீட்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் முல்லைத்தீவில் காணாமல்போன இரு சிறுவர்களும் கண்டுபிடிக்கப்பட்டு, பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (முன் வந்த செய்தி 5ம் பக்கத்தில்)

## இலங்கைக் கப்பல் தாக்கப்பட்டது

(கொழும்பு)

சவூதி அரேபியாவிலிருந்து இலங்கைக்கு மசகு எண்ணெயை ஏற்றிவந்த 'ரேயல்

(8ம் பக்கம் பார்க்க)

## பயங்கர சத்தத்துடன் குடிசைக்குள் 'நுழைந்து' சிதறிவெடித்த குண்டு!

### கலவரத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு மற்றுமொரு பயங்கரம்

-கா. யோகநாதன்-

''பயங்கர சத்தத்துடன் பனை ஓலைக்குடிசையின் பக்கத்தை துளைத்து, பனம் வளையை சிதறடித்த குண்டு, உள்ளே நித்திரையிலிருந்த என் தம்பியின் மனைவி கலாவதியின் உச்சந்தலையை தாக்கி பிளந்ததால் அவர் உடனடியாக மயக்கமடைந்தார். என் தம்பிக்கு தோளிலும் காலிலும் காயங்கள் ஏற்பட்டது. வீட்டிற்குள் கிடந்த குண்டுப் பாகத்தையும், ஆஸ்பத்திரியில் கொண்டுவந்து ஒப்படைத்தோம்''

கரணவாயில் குண்டு தாக்கி காயமுற்ற இக் கர்ப்பிணி கலாவதியையும், அவர் கணவன் தங்கத்துரையையும் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதித்த நல்லதம்பி செல்லத்துரை நேரடியாக எம்மிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: காயமடைந்த தங்கத்துரை என்தம்பி கலாவதிஅவர் மனைவி.

1983ம் ஆண்டு ஜுலை மாதம், கொழும்பு மல்வத்தை வீதியிலுள்ள ஜசபாத்து தொழிற்சாலையில் நானும் தம்பியும் வேலைசெய்தோம் ஜுலை கலவரத்தின்போது தொழிற்சாலை பாதிக்கப்பட்டது. நானும் தம்பியும் மதில் ஏறிக் குதித்துத்தப்பித்துக் கொண்டோம் பலத்தகஷ்டத்துடன் வேலையையும் இழந்த சொந்த ஊருக்கு அகதிகளாக

(8ம் பக்கம் பார்க்க)

## இணுவிலில் காணப்பட்ட சடலம்

(யாழ்ப்பாணம்)

இணுவிலில் நேற்று ஒருசடலம் பாடசாலைக்கருகில் காணப்பட்டது.

இவர் உடலில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாக கூறப்படுகிறது இச்சடலம் உத்தியோகபூர்வமாக அடையாளம் காணப்படவில்லை. நண்பகல் வரை சடலம் அவ்விடத்திலேயே கிடந்தது.

சுழிபுரம் கிராம சேவகர் நேற்றுப் பிற்பகல் இச்சடலத்தை யாழ். ஆஸ்பத்திரியில் கொண்டு வந்து ஒப்படைத்தார்.

ஸ்தலத்தில் காணப்பட்ட அறிவித்தலொன்றில் இச்சடலம் சுழிபுரம் க. இராசதுரையினுடையதென்றும் இவர் பல குற்றச் செயலில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

★ ஈழத்தமிழர் விவகாரம்

## இலங்கைத் தூதுவர்மீது சுவிஸ் ஜனதிபதி கண்டனம்!

பேர்ண், செப். 16 சுவிற்சர்லாந்துக்கான இலங்கையின் புதிய தூதுவர் திருதலுவத்துமுல்லே கமகே பந்து சேன டி சில்வா சுவிஸ் ஜனதிபதி, வெளிநாட்டமைச்சர் ஆகியோரின் கண்டனத்துக்குள்ளாகியுள்ளார்.

திரு. சில்வா தமது தூதுவர் பதவிக்கான நியமனப் பத்திரத்தை சுவிஸ் ஜனதிபதியிடம் வியேன் ஷம்பிடம் கையளித்தபோதே கண்டனத்துக்குள்ளானர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## மயக்கம் தெளியாமலே கலாவதி மரணமானர்!

(யாழ்ப்பாணம்)

யாழ் பெரியாஸ்பத்திரியில் நேற்று முன்தினமிரவு குண்டுக் காயத்துடன் அனுமதிக்கப்பட்ட இளம் கர்ப்பிணி கலாவதி மயக்கம் தெளியாமலே மரணமானர்.

வார்ட்டிலிருந்து நேற்றுஅதிகாலை 3 மணிக்கு கலாவதியின் சடலம் பிரேத அறைக்கு அனுப்பிவைக்கப்பட்டது

உச்சந்தலையிலிருந்து இரத்தம் வடிந்து உறைந்து கட்டியாகக் காணப்பட்டது மூக்கிலிருந்தும் திரவம் வடிந்து கொண்டிருந்தது. பிரேத பரிசோதனைக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது (க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் தெற்கு பலாலி வீதியில் (சத்தறந்தை) என்னும் 9 பரப்பு தோட்டக் காணி உடனடியாக விற்பனைக் குண்டு. தொடர்பு கொள்ள வும். சி. சிவசெல்வம், புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன். 1708

கோண்டாவில் கிழக்கில், நல்ல சூழ்நிலையில் அமைந்த 3 பரப்பு 6 குழி காணியும், கிணறு, கல்வீடுடன் விற்பனைக் குண்டு. நேரில் தொடர்பு கொள்க: S. S. நவரத்தினம், சிவா பிறதேஸ், பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு. 1732

புத்தம் புதிய நிலையில் Honda C 70 (Econo Power) 86 ஸ்ரீ 9464 உடன் விற்பனைக் குண்டு. க சத்தியநாதன், கொட்டைகாடு லேன், கோண்டாவில் கிழக்கு. 1777

திருநெல்வேலியில் 1 பரப்புக் காணியில் அமைந்த மாடி வீடு அமைப்பு கீழ் வீடு மாத்திரம் முடிவடைந்த நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: R. மகாதேவா, கேணியடி லேன், திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 1781

வண்ணார்பண்ணை மேற்கு ஆறுகால் மடத்தடியில் 2 பரப்பு (நெற்பரப்பு) விற்பனைக் குண்டு. விபரங்கட்கு 167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 1794

மிக நல்ல நிலையிலுள்ள டிராக்டர்பெட்டியுடன் Massey Ferguson 36 ஸ்ரீ 7000 தொடர் இலக்கத்துடன் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: கௌரி ரெக்ஸ்ரைல்ஸ், 155, 156, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 1761

(Hisex) வெள்ளை, சிவப்பு நிற 1 மாதக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சிமாட்டி பாம்ஸ் புகையிரத வீதி, மயிலங்காடு சுன்னாகம். 1785

## தேவை

யாழ்ப்பாணம், ரேயல் டிஸ் பென்சறிக்கு நல்ல ஆங்கில கணித அறிவுள்ள பெண் உதவியாளர் உடன்தேவை. நேரில் வரவும். 1763

நல்லூரிலிருக்கும் எமது வாசனைத் தொழிற்சாலையில் வேலைக்கு, நற்குணமும் நல்லொழுக்கமும் உள்ள பெண் பிள்ளைகள் தேவை. நல்லூருக்கு அண்மையிலுள்ள கிராமங்களில் வசிக்கும் பெண் பிள்ளைகள், நற்சான்றுப் பத்திரங்களுடன் நேரில் வரவும்- எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி 191 (53) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1786

விற்பனையாளராகப் பணி புரிய படித்த சிறுபையன் தேவை. நற்சான்றுப் பத்திரத்துடன் தொடர்பு கொள்ளவும். ஞானசுரபி புத்தகக் கம்பனி 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 1784

எமக்கு இசுசு லொறி ஒன்று குத்தகையாகத் தேவை. விரும்புவோர் மேற்கண்ட விலாசத்திற்கு அறிவிக்கவும். பாதுகாதேவி ஸ்ரோர்ஸ், ஓட்டு வியாபாரம், ஆடியபாதம் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். 1790

## காணவில்லை

தம்பி நகுலா 1984-8-27 முதல் உன்னை காணாமல் வீட்டில் எல்லோரும் ஆழ்ந்த கவலையுடன் இருக்கிறோம். உனக்கு ஒரு தம்பியும் கிடைத்துள்ளார். அப்பா அம்மா மிகுந்த கவலையால் நோயுற்றுள்ளார்கள் ஆகவே எந்த வித மனத்தாங்கலும் இல்லாமல் மன்னித்து உடன் வீடு வந்து சேரவும். அண்ணன் நா இரகு. 1778

## விண்ணப்ப அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் களபூமியைச் சேர்ந்தவரும, மலாக்காவில் வசித்தவருமான காலஞ்சென்ற நல்லதம்பி இராசையா கைம்பெண் இராசம்மா அல்லது சிதம்பரம் என்பவரின் மரணசாதன விடயமாக-

மரணச் சொத்து,
நிருவாகம்,
வழக்கு இலக்கம்: 3817.

இன்னும்

1977-ம் ஆண்டு 20-ம் இலக்கக் குடியியல் நடைமுறைக் கோவையின் திருத்தச் சட்டத்தின் 554 (u) பிரிவின் கீழ் வெளிநாட்டு மரணச் சொத்து நிர்வாகத் தத்துவப் பத்திரம் அங்கீகரிப்பதற்கும், கீழ் இலச்சனை இடுவதற்குமான விடயம்-

இன்னும்

1982-ம் ஆண்டு மார்கழி மாதம் 9-ம் திகதி மலாயா மேல் நீதிமன்றத்தால் மரணச் சொத்து நிர்வாகப் பத்திரம் அளிக்கப்பட்டவர்களுமான சரோஜினி தேவியும் ஜெயலட்சுமியும் ஆகியவர்களின் அற்ரோணித் தத்துவகாரர் நல்லூரைச் சேர்ந்த இரகுநாதர் கனகசுந்தரம்-

— விண்ணப்பகாரர்

இத்திகதியிலருந்து 14 நாட்களுக்குப் பின்பு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்திற்கு மேற்குறிப்பிட்ட களபூமி வாசியான மலாக்காவைச் சேர்ந்த வருமான காலஞ்சென்ற இராசையா கைம்பெண் இராசம்மா அல்லது சிதம்பரம் என்பவரின் மரணசாதனம் ஒப்பேற்றப்பட்டு, மலாயா மேல் நீதிமன்றத்தில் 1982-ம் ஆண்டு மார்கழிமாதம் 9-ம்திகதி 154ம் இலக்கம் கொண்ட மரணச் சொத்து நிர்வாக தத்துவப் பத்திரத்தை 1977-ம் ஆண்டு 20-ம் இலக்க குடியியல் நடைமுறைக் கோவையின் திருத்தச் சட்டத்தின் 554 (u) பிரிவின் கீழ் இந்நீதிமன்றத்தின் இலச்சனை இடுவதற்கு ஓர் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுகின்றது என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது

–திருமதி லிங்கா துரைராஜா
விண்ணப்பதாரரின்
சட்டத்தரணி

திருமதி லிங்கா துரைராஜா,
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தரிஸும்,
19 பண்டாரக்குளம் ரேட்,
நல்லூர், யாழ்ப்பாணம். 1731

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

ஊரெழுகிழக்கைச்சேர்ந்த காலஞ்சென்ற திருவிளங்கம் பாலச்சந்திரன் பெண் கலாவதிஎன்பவரின்மரண சாதனமற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்,

மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல. ரி/207

திருவிளங்கம் பாலச்சந்திரன்.
சிவசக்தி கோவிலடி,
அச்சுவேலி.
எதிராக

மனுதார்.

1. பாலச்சந்திரன் கலாதரன் (பராயமற்றவர்)
2. கந்தையா கனகசுந்தரம் (பராயமற்ற 1ம் எதிர் வாதியின் வழக்குப் பாதுகாவலர்)
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984ம் ஆண்டு ஐப்பசி மாதம் 3ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1984-ம் ஆண்டு ஆடி மாதம் 20 ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஆழ்வார்
சிவபாதசுந்தரம்
பதிவாளர்.

வரைவு
க. குணரத்தினம்
மனுதார்
சட்டத்தரணி.
1758

## பாதிக்கப்பட்ட இடங்களை நல்லை சுவாமிகள் பார்த்தார்!

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் அண்மையில் வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட இடங்களை நல்லை ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தலைமையிலான குழுவினர் பார்வையிட்டனர்.

அகில உலக இந்து மகாசபையின் இலங்கைக்கிளைத் தலைவர் திரு. யோகேந்திரா துரைசுவாமி, அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத் தலைவர் திரு. சோ. அருணசலம், கிளிநொச்சி காந்திய பண்ணை தலைவர் திரு. வேலாயுதபிள்ளை உட்பட கரவெட்டி, பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர்கள் இக்குழுவில் அடங்கியிருந்தனர்.

பாதிக்கப்பட்டஇடங்களான அச்சுவேலி, திக்கம், பருத்தித்துறை, கரணவாய் ஆகிய பகுதிகளிலுள்ள மக்களையும் சந்தித்து ஆறுதல் கூறினர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும்பொருட்டு உலகிலுள்ள அனைத்து இந்து ஸ்தாபனங்களுடனும் இக்குழுவினர் தொடர்பு கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (மா)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம்
மல்லாகம்

குப்பிளான் ஏழாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா சதானந்தன் என்பவரின் மரணசாதன மற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் } இல ரி/212

செல்லையா சதானந்தன் கைம்பெண் சாரதாதேவி
கேணியடி, குப்பிளான்,
ஏழாலை.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 17-ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984-ம் ஆண்டு ஆவணி மாதம் 20-ம் திகதி.

கோட்டுக் கட்டளைப்படி
ஆழ்வார்
சிவபாதசுந்தரம்
பதிவாளர்.

கே. பரமநாதன்
மனுதாரின்
சட்டத்தரணி.
1757

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம்
மல்லாகம்

அளவெட்டி தெற்கு வாசியும் மரணமானவரும் ஆகிய கார்த்திகேசு தம்பாப்பிள்ளை என்பவரின் மரணசாதனமில்லாமரணச்சொத்து விடயத்தில்

— மரணமெய்தியவர்

வழ இல / தத்துவப /205

கார்த்திகேசு தம்பாப்பிள்ளை கைம்பெண் சிதம்பரப்பூபதி,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

மனுதார்

எதிர்

[1] தம்பாப்பிள்ளை சிறீதரன், அளவெட்டி தெற்கு, தற்பொழுதுடாற்போட்கெனட் இங்கிலாந்து,
[2] தம்பாப்பிள்ளை கங்காதரன்,
[3] தம்பாப்பிள்ளை மகள் மாலதி,
[4] தம்பாப்பிள்ளை சிறீறங்கன்
[5] தம்பாப்பிள்ளை மகள் நந்தினி,
[6] தம்பாப்பிள்ளை தசரதன்,

எல்லோரும்
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

— எதிர்மனுதார்கள்

மேற்சொல்லப்பட்ட இலக்கம் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்தை நிரூபிப்பதற்காக மேற்சொல்லப்பட்ட மன்றிலே தொடுக்கப்பட்டு அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இவ்விடயத்தில் அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 19ம் நாளன்று இந்நீதிமன்றின்முன்பு தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக ஆக்கப்படலாகாது என்று காரணம் காட்டுவதற்கு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1984—ம் ஆண்டு ஆனி மாதம் 20ந் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

என்னாலே தயாரிக்கப்பட்டது.
இ. ந. சிவப்பிரகாசம்,
மனுதாரின் சட்டத்தரணி.
1738




GOLDEN COMMET CHICKS FROM CHRISTOMBU FARM

புலட்ஸ் — புரெய்லர்ஸ்
கொக்கநல்
ஏகவினியோகஸ்தர் Bookings
எஸ்- எஸ். சிற்றி
கிறைன்டிங்மில் மெடிக்கல்ஸ்
FARM 260, ஆஸ்பத்திரி
மூளாய் தெற்கு, வீதி,
சுழிபுரம். யாழ்ப்பாணம்.

(1772)

Red Rosa Poultry Farm
கெருடாவில் கந்தசுவாமி கோவிலடி,
தொண்டமானாறு

வல்வெட்டித்துறை, தொண்டமானாறு ஆகியவற்றை உள்ளடக்கியதும் அதற்கு சமீபத்தில் அமையப்பெற்ற மற்றைய ஊர் மக்களுக்கும்

ஓர் அரிய சிறந்த சேவை

நாளாந்த உணவுப் பாவனைக்கு மீன் தட்டுப்பாடு நிலவும் இந்த கால கட்டத்தில் மீன் விலைக்கு சரி நிகர் விலையும் மீனை விடக் கூடிய புரதம் நிறைந்ததுமான

நல்ல இனக் கோழிகள்

இறைச்சிக்கு தொகையாகவும் சில்லறையாகவும் எந்த நாளும் எந்த நேரமும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு கொள்ளவேண்டியது:

நடராசா சிறீதரன்,
''சுவர்ணலதாபவனம்'',
தெணியம்பை. வல்வெட்டித்துறை.

(1788)

# தென்னுபிரிக்காவில் வெள்ளையரல்லாத இருவருக்கு அமைச்சர் பதவி!

## சரித்திரத்தில் முதல் தடவை!!

ஜொஹன்ஸ்பேர்க், செப் 16

**தென்னுபிரிக்காவின் புதிய அமைச்சரவையில் வெள்ளையரல்லாத இருவருக்கு முதல்தடவையாக அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இவ்விரு அமைச்சர் பதவிகளும் பொறுப்புக்கள் எதுவுமற்றவையாகும். தென்னுபிரிக்க இந்தியர் ஒருவரும் தென்னுபிரிக்கக் கறுப்பரல்லாத வேருெருவருமே இப்புதிய அமைச்சர்களாவர்.**

வெள்ளையரல்லாத இவ்விருவரினதும் அமைச்சர் நியமனங்களை தென்னுபிரிக்க ஜனுதிபதி திரு. பி. டபிள்யு போத்தா நேற்று வழங்கினுர்.

இருபதுபேர் கொண்ட தென்னுபிரிக்காவின் புதிய அமைச்சரவையில் இவ்விருவரும் தவிர ஏனைய பதினெட்டுப் பேரும் வெள்ளையர்களாவர். புதிய அரசியலமைப்பின் கீழ் தென்னுபிரிக்காவில் கறுப்பர்களுக்கும் பாராளுமன்றில் இடமளிக்கும் வகையிலேயே இவ்விரு நியமனங்களும் வழங்கப்பட்டன.

தென்னுபிரிக்காவில் 73 சதவீதமான மக்கள் கறுப்பர்கள் ஆவர். அவர்களை மிகுதி 27 சதவீதமான வெள்ளையர்களே தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்து இன ஒடுக்கல்களை மேற்கொள்கின்றனர்.

தெ. ஆபிரிக்க ஜனுதிபதி திரு. போத்தா இவ்விரு அமைச்சர் நியமனங்கள் குறித்தும் கருத்துவெளியிடுகையில், ''தென்னுபிரிக்கக் கறுப்பர் அல்லாத கறுப்பர் இனத்தவருக்கே இவ் அமைச்சர் பதவிகளில் முக்கியம் தரப்பட்டுள்ளது. ஏனெனில் தென்னுபிரிக்கக் கறுப்பர்கள் கீழ்ப்படிவற்றவர்கள். வீண்வாதங்களுக்கு இடமளிப்பர்'' என்றுர்.

இதேவேளை நேற்று முன்தினம் திரு. போத்தா தென்னுபிரிக்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனுதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அவர் தமது பதவியேற்பையடுத்து, வெளிநாடுகள் தென்னுபிரிக்காமீது கண்டனங்களை விடுப்பதை பலமாக எதிர்த்துஉரையாற்றினுர்.

இது இவ்வாறிருக்க தென்னுபிரிக்காவின் டேர்பன் நகரில் உள்ள பிரித்தானிய தூதராலயத்தில், வெள்ளையர் ஆட்சிக்கெதிரான ஆறு பேர் தஞ்சமடைந்துள்ளனர். இவர்கள் தாம் நேரில் பிரிட்டிஷ் பிரதமரையும், வெளிநாட்டமைச்சரையும் சந்தித்து புதிய தென்னுபிரிக்க அரசின் கடும் போக்கான கொள்கைகளைச் சுட்டிக்காட்டப்போவதாகக் கூறியுள்ளனர். (கி)

## டயானுவிற்கு இரண்டாவது ஆண்குழந்தை!

### ''மகன் கிரிக்கெட் வீரனுவான்''

— சார்ள்ஸ்

லண்டன், செப். 16,

பிரிட்டனின் எதிர்கால மகாராணியார் டயானு நேற்று நண்பகல் ஆண்குழந்தை யொன்றைப் பிரசவித்தார். இது ஒரு சுகட பிரசவமென்றும், குழந்தையின் எடை ஆறு இருத்தல் 14 அவுன்ஸாக இருந்ததென்றும் தெரிவிக்கப்பட்டது.

இளவரசி டயானுவிற்கு இது இரண்டாவது ஆண் குழந்தையாகும். மூத்தமகன் இளவரசர் வில்லியத்திற்கு வயது இரண்டாகும்.

சர்வதேச மகப்பேற்றுவைத்தியர் டாக்டர் ஜோர்ஜ் பிங்கர், வேறு நான்கு டாக்டர்களின் உதவியுடன் இப்பிரசவத்தைக் கவனித்தார்.

குழந்தையின் தந்தை முடிக்குரியா இளவரசர் சார்ள்ஸ், தமது மூத்தமகன் வில்லியம் சகிதம் வைத்தியசாலை சென்று மனைவி டயானுவையும் இரண்டாவது புதல்வனையும் பார்வையிட்டார்.

''எனது மகன் ஒருகிரிக்கெட் வீரனுக வருவான்'' என்று இளவரசர் சார்ள்ஸ் வைத்தியசாலையில் பத்திரிகையாளரிடம் கூறினுர். (கி)

## ''மட்டக்களப்பு பிரதேச கல்வி வீழ்ச்சி: அங்குள்ள அமைச்சர்களே பொறுப்பேற்க வேண்டும்

### இ. த. ஆ. சங்கத் தலைவர் வணசிங்கா கூறுகிறுர்

(திருகோணமலை)

''மட்டக்களப்பு பிரதேச கல்வி அபிவிருத்தி வீழ்ச்சியடைந்திருப்பதற்கு காரணம் அங்குள்ள இரண்டு அமைச்சர்களுமேயாவர்.''

இவ்வாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. டி. எஸ். கே. வணசிங்கா இச்சங்கத்தின் திருகோணமலை கிளையின் வருடாந்தக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினுர்.

திருகோணமலை இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. வணசிங்கா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''1977ம் ஆண்டு தேர்தலின் பின்னர் மட்டக்களப்பில் கடமையாற்றிய ஒழுக்கமான, திறமையான, வகுப்புகளுக்குச் செல்லத் தயங்காத ஆசிரியர்கள் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். அதற்குப் பதில் வகுப்புகளுக்குச் செல்லத் தயங்கிய, வேறு தொழில் செய்து வந்த ஆசிரியர்களுக்குப் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டன. இதன் காரணமாகத்தான் மட்டக்களப்பு பிரதேசத்தின் கல்வித்தரம் மிகமோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

''இதற்கான பொறுப்பை அங்குள்ள இருஅமைச்சர்களும் தான் ஏற்கவேண்டும். இந்த இழிநிலைக்கு காரணம் அவர்கள் தான்.''

''இந்தக் கருத்துக்களை அந்த அமைச்சர்கள் முன்னிலையிலும் நான் எடுத்துக்கூறியுள்ளேன். அந்த அமைச்சர்கள்தான் இதற்குக் காரணம் என்பதை இன்றும் கூறுகிறேன். இனியும் கூறுவேன்'' என்றுர்.

## எம். ஜி. ஆருக்குரூ.40 லட்சம் கடன் பாக்கி!

### அவரே வெளியிட்ட தகவல்!

சென்னை, செப். 16,

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தமக்கு சுமார் 40 லட்சம் ரூபா கடன் பாக்கி இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

நேற்று சென்னையில் நடந்த அறிஞர் அண்ணுவின் 75-வது பிறந்ததினக் கொண்டாட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

திரு. எம். ஜி. ஆர். மேலும் பேசியதாவது: 'எனது வாழ்க்கை ஒரு திறந்த புத்தகமாகும். சுமார் 40 லட்சம் ரூபா கடன் பாக்கியுடன் நான் வாழ்கிறேன்.

இக்கடனை நான் இறந்தபிறகு எனது சொத்துக்களை விற்றுத்தீர்த்த பின்னர் எஞ்சியதொகையை அனுதைச் சிறுவர்களுக்கு வழங்கும்படி கூறியுள்ளேன்'' என்றுர். திரு. எம். ஜி. ஆர். இலங்கைப்பிரச்னைபற்றிப் பேசுகையில் ''இலங்கை அரசு இலங்கைத் தமிழர் பிரச்னைகளைத் தீர்க்க இராணுவத்தை பெருமளவில் ஈடுபடுத்துவது, இலங்கையின் பாதுகாப்பிற்கே உகந்ததில்லை'' என்றுர். (கி)

## நேற்றுமுதல் ஐ. நா. சிறுவர்வாரம்

(நியுயோர்க்)

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இவ்வாரத்தை நேற்று ஞாயிற்றுக் கிழமை முதல் சிறுவர் வாரமாக அறிவித்துள்ளது.

உலகின் நோய், பசி, பட்டினியால் வாழும் சிறுவர் உட்பட அடக்கு முறைகள், கொடுமைகளுக்குள்ளாகியுள்ள சிறுவர்களுககு வாழ்வளிக்கும் வகையிலேயே இவ்வாரம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

ஐ. நா. அறிக்கையின்படி ஆபிரிக்கா, ஆசியா, தென் அமெரிக்க நாடுகளில் உட்பட உலகில் மொத்தம் 150 லட்சம் சிறுவர்கள் பல்வேறுபட்ட பிரச்னைகளுக்கும் உள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்துடன் நாளொன்றுக்கு சுமார் 40 ஆயிரம் சிறுவர்கள் மடிவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வயிற்றோட்டமே சிறுவர்களை பெருமளவில் இறக்கசெய்யும் நோய் என்றும், உப்பு, சீனி, நீர் கலந்த புதிய மருந்துக் கலவையொன்றின் மூலம் இவ்வயிற்றோட்டத்தைக் கட்டுப்படுத்தலாம் என்றும் அவ்வறிக்கை தெரிவித்துள்ளது. (கி)




UNIQUE COMMUNICATION SERVICE

யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்

நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக்

24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28/18 - 1 1 மகாத்மா காந்தி ரோட்,
(சலுசலவுகத் அனமையில)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ் - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்
அவுஸ்திரேலியா கட்டிடம
த.பெ 1917, 54 யோர்க் வீதி, கொழும்பு :
ரெலெக்ஸ். - 21652, 21742 21918 21931, PERIMP CE.
தொலைபேசி:-22726 547884, 548626, 549065, 549066

அமெரிக்கா ★ கனடா ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ இத்தாலி
போன்ற சகல நாடுகளுக்கும் செல்ல
டிக்கட் மற்றும் சகல ஒழுங்குகளுக்கும் நாடுங்கள்!

AIR-TRANSIT

TRAVEL CONSULTANTS

99–2/56 B கபூர் பில்டிங்,
2–வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

### மணிவாக்கு

கசக்கும் உண்மையானது தித்திக்கும் பொய்யினும் பெரிது. — அருள்விருந்து.

# நமது நோக்கு

## தருமருடைய பொறுமை தேவை

"ஆயிரம் துப்பாக்கிச் சனியன்களைக் காட்டிலும் மூன்று பத்திரிகைகளைக் கண்டு நான் அஞ்சுகிறேன்"

இவ்வாறு கூறியவர் இந்த நூற்றாண்டில் உலகம்கண்ட ஆங்கில வீரன் சேர் வின்ஸ்டன் சேர்ச்சில்.

சண்டையில் வீரனை சேர்ச்சில் சமாதான உலகுக்கு உதவாதவரென்று எழுதிய பத்திரிகைகள் இரண்டாவது உலகமகா யுத்தம் முற்றுகமுடியமுன்னரே அவருடைய ஆட்சிக்கு முடிவுகட்டின.

இரண்டாவது தடவை அதிகமான பெரும்பான்மை வாக்கால் அமெரிக்க ஜனாதிபதியாக வந்த நிக்ஸனை ஆட்சியிலிருந்து நீக்குதல் மக்களுக்கு இலகுவாக இருக்கவில்லை. அவர் வெளியேறவேண்டுமென்ற பலத்த பொதுஜன அபிப்பிராயத்தை நிறைவேற்றிய பெருமை பிரபல அமெரிக்க பத்திரிகைகளையே சாரும்.

எனவே இந்த நாட்டில் இன்று நடைபெறும் கொடுமைகளைக்கண்டு ஆட்சியை அஞ்சவைக்கும் வல்லமையுடைய பத்திரிகைகள் மூன்றல்ல, ஒன்றையே காண முடியவில்லை.

தற்கொலை போன்று இது நம்மை நாமே கண்டிக்கும் செயலென்ருலும் உண்மையை உணர்த்தவேண்டிய பொறுப்பு இவ்வித கண்டனத்தை நிர்ப்பந்திக்கிறது.

மக்கள் தகுதியைப் பொறுத்தே ஆட்சி அமைகின்றது, ஆட்சியின் பண்பைப் பிரதிபலிப்பதே பத்திரிகை.

வவனியாவில் நடைபெற்ற கொடுமையே இன்று பேசப்படும் விடயம். அச் சம்பவத்தின் உள்ளுடனைப் புரியக்கூடிய மக்களுக்கு கொழும்பு பத்திரிகைகள் கொடுக்கும் வியாக்கியானம் இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்கள், எவற்றை இழந்த போதும் தமக்குண்டெனை நினைக்கும் கதியை இழந்துவிடுவார்களோவென்று அஞ்சவைக்கிறது.

ஐந்து நாட்களுக்குப் பின் ஆறுதலாக நடைபெறும் அரச விசாரணை யாரைப் பாதுகாக்க உதவுமென்பதில் சந்தேகமுண்டா?

மூன்று ஆண்டுகளாகத் தீவிரமடையும் இத் துன்பங்கள் உலகறிய ஒரு திறந்த நூலாய்விட்டன.

இவற்றிற்கு நிவாரணம் இன்னும் விசாரணையே என்ருல் இரட்டைச் சுவாதத்தில் உயிருக்குப் போராடும் ஒருவனுக்கு குடிநீர் கஷாயம் கொடுப்பது போலாகும்.

சுதந்திர இலங்கையில் தமிழ்மக்களின் அரசியல் அந்தஸ்து தீர்க்கப்படாத விடயமென்பதை இன்று எவரும் ஆட்சேபிக்கத் துணியார்.

ஆட்சிக்குவந்த இருகட்சிகளின் தலைவர்கள் — குறிப்பாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, இன்றைய ஜனாதிபதி ஜெயவர்த்தன — இவ்விருவரும் அண்மைக்காலம் வரைக்கும் இப்பிரச்னையில் பிரமாதமானதெதுவும் தீர்க்கப்படாதிருக்கவில்லையென்று வாதாடினர்.

இதனை உலகுக்கும், குறிப்பாக பாரததேசத்துக்கும் செவ்வனே புரியவைத்தவர்கள் இன்று தமிழர்களுக்கு சுதந்திரம் கோரும் விடுதலை வீரர்கள்.

இவர்கள் விடுதலை வீரர்களோ 'பயங்கரவாதிகளோ' என்ற ஆராய்ச்சி இன்றைய அழிவு நிலையில் பயனற்றது.

அரசியல் பிரச்னை ராணுவப் பிரச்னையாக மாறியதும் இனக்கலவரம் என்று சொல்லப்படும் / கொடுமை தமிழ் அப்பாவி மக்கள் இடைவிடாது கொல்லப்படுவதும், சொல்லொணுத் துன்பங்களுக்குள்ளாவதும் எவ்வாறு நிறுத்தப்படுவது?

இதுவே மிகமுக்கியமான கேள்வி இதற்கொரு அரசியல் தீர்வு சிங்கள மக்களால் தான் முடியும். அதனைத் தமிழ்மக்கள் ஏற்றேயாக வேண்டுமென்ருல் இன்று நிலவும் அபாயநிலை தொடருமென்பது அர்த்தம்

அந்த நிலையென்ருல் என்ன? சிவில் வாழ்வில், ராணுவவீரர் எக்காரணம் கொண்டும் கொல்லப்பட்டால் அதற்குப் பொறுப்பான எதிரிகளைத் தண்டிக்க முடியாது போனுல், பொது மக்கள் கொலை செய்யப்படுவதும், வீடுவாசல் உடைமை, பாடசாலை மற்றைய பொதுநல சாதனங்கள் ஈனமிரக்கமின்றி அழிக்கப்படுவதுமே!

இந்த அராஜகத்துக்கு முடிவு கிடையாதா? தமிழ் உயிருக்கு உத்தரவாதமில்லையா? மிகநெருக்கடியானநிலை இது. அரசியல் தீர்வு ஆகாயத்திலிருந்து விழாது; ஆனுல் பேசிப் பேசி காலம் வீணுய் கழிந்துவிட்டதே.

பொறுமைக்கும் எல்லையுண்டு. அந்த எல்லை எதுவென்பதே இன்று முக்கியம்.

மனைவியைக் கவர்ந்த இராவணன் போரில் தோல்வியுற்று படையும் குடையும் இழந்து விழுதுடைய ஆலமரம் போல் நின்றபோது கருணைவடிவான ராமன் "இன்று போய் போருக்கு நாளை வா" என்று கருணை புரிந்தார்.

இதுபாரதப்பண்பு; இதில் எமக்குரித்துண்டு என்பதை பாரதம் ஏகமனதாய் உணர்கின்றது.

எனவே நாம் அனுதைகளல்ல. பொறுமையின் பெருமையைக் காக்கவேண்டியவர்கள் நாம்.

"வலியரும் ஒரு
காலத்தில் வன்மையை
இழப்பர் ஆற்ற,
மெலியரும் ஒரு
காலத்தில் வீரராய்த்
திகழ்வர் அன்றே"

என்பது கந்தபுராணம்; அதில் நம்பிக்கைகொண்டு நாம் ஆட்சித்தலைவரை மீண்டும் அணுகுவோம்.

தமது 78வது ஆண்டு நிறைவடையும் இந்நன்னுளில் ஜனாதிபதி அவர்கள் நீண்டகாலம் வாழவேண்டுமென்று வாழ்த்துகிருேம். இக்காலகட்டத்தில் ஆட்சியின் பொறுப்பு மிக அபாரமானது, அபாயமானதும் கூடவென்பதை உணர்கின்ருேம்.

தமிழ் மக்கள் இன்றைய இன்னல்கள்ஒழிய பாதுகாப்பாகவும் மதிப்பாகவும் வாழ இறைவன் வழிகாட்டவேண்டுமெனப் பிரார்த்திக்கின்ருேம்.

### தமிழ் மக்கள் பிரச்னை

## உடனடித்தீர்வுக்கு அமைச்சர் 'ராசு' ஜனதிபதியிடம் வேண்டுகோள்!

(கொழும்பு)

"தமிழ்மக்களுடையபிரச்னை என்றுமில்லாத வகையில் இன்று நாட்டில் ஒரு பெரும் நெருக்கடி நிலையை உருவாக்கியுள்ளது. எனவே காலம் தாழ்த்தாது இப்பிரச்னைக்கு ஒரு அரசியல் தீர்வு உடனடியாக காணவேண்டும். நாட்டு மக்களும், வெளிநாட்டு மக்களும் ஏற்கக் கூடிய வகையில் அந்தத் தீர்வு அமைய வேண்டும்."

ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைச் சில தினங்களுக்கு முன்னர் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை சந்தித்தபோது மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளார்.

நிர்வாக அதிகாரங்களை பரவலாக்க வேண்டும் என்றும், மாகாண சபைகளை உருவாக்க வேண்டும் என்றும், பிரதேச சபைகள் உருவாக்கப்பட வேண்டுமென்றும் காலத்துக்கு காலம் பல தாபனங்களினுலும், அரசியல் தலைவர்களினுலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டு வந்துள்ளது பற்றிச் சுட்டிக் காட்டிய அமைச்சர், நிர்வாக பரவலாக்கல் என்கிற கோரிக்கை தமிழ் மக்களினுல் மட்டும் எழுப்பப்படவில்லை என்றும் 1926ம் ஆண்டு காலஞ்சென்ற பிரதமர் எச். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா நிர்வாகத்தைப் பரவலாக்குவதற்கும், இன ஒற்றுமைக்கும் சமஸ்டி அரசியல் அமைப்பு முறையே தகுந்தது என்று கூறியிருக்கின்ருர் என்றும் விளக்கினுர்.

சட்ட சபை, பாராளுமன்றம் ஆகியவற்றில் 1932ம் ஆண்டிலிருந்து சமீப காலம் வரை காலத்துக்குக்காலம் சகல அரசியல் கட்சிகளும் (சிங்கள மகா சபை உட்பட) சிங்கள மொழிக்கும், தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து வழங்க வேண்டும் என்று வெளியிட்ட கருத்துக்களின் போட்டோ ரஸ்ட் நகல்கள், பண்டா-செல்வா ஒப்பந்தம், மேற்படி ஒப்பந்தம் பற்றி அரசாங்க வர்த்தமானியில் வெளிவந்தது. டட்லி-செல்வா ஒப்பந்தம் ஆகியவை அடங்கிய 80 பக்கங்களைக்கொண்ட குறிப்பேடுகளையும் இச்சந்திப்பின் போது அமைச்சர் ஜனதிபதியிடம் கையளித்தார்.

சுவிற்சர்லாந்து, கனடா, ஆகிய நாடுகளின் அரசியல் அமைப்புக்கள், இங்கிலாந்து நாட்டிலுள்ள மாகாண பொலிஸ் அமைப்புக்கள் ஆகியவற்றின் போட்டோ ரஸ்ட் பிரதிகளும் அதில் அடங்கியிருந்தன.

சமீபத்தில் முல்லைத்தீவு, வவனியா, ஆகிய பகுதிகளில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் பற்றியும் அமைச்சர் ஜனதிபதியிடம் எடுத்துக்கூறினுர். நீண்ட நேரம் நடைபெற்ற இப்பேச்சு வார்த்தையின் போது மிக விரைவில் நாட்டுமக்கள் ஏற்றுக்கொள்ள கூடிய தீர்வு ஒன்றை தாம் கொண்டுவரவுள்ளதாக ஜனதிபதி தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. (சூ)

## வவனியா படுகொலைச் சம்பவம்: கம்யூனிஸ்ட் (இடது) கண்டனம்

(யாழ்ப்பாணம்)

"கடந்த வாரம் வவனியாவில் இடம்பெற்ற பஸ் பிரயாணிகள் மீதான கொலை வெறியாட்டத்தை நேர்மை உள்ளம் படைத்த எவரும் கண்டிக்காமல் இருக்கமுடியாது. ஆனுல் அத்துயரச் சம்பவத்தைத் தொடர்ந்து அரசும் அரசு தொடர்புச் சாதனங்களும் வெளியிட்ட கருத்துக்கள் அக் கொடிய செயலில் ஈடுபட்டவர்களை உற்சாகப்படுத்தி, அது போன்ற நடைமுறைகளுக்கு அங்கீகாரம்அளிப்பது போல அமைந்துள்ளது. இது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய தொன்ருகும்.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) பொதுச் செயலாளர் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் கட்சியின் அரசியல் குழு சார்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவ் வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

கடந்த வருட ஜூலை இனவாத வன்செயல்களின் போது வெலிகடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற கொடூரக் கொலைகளுக்குக் காரணமானவர்கள் நீதி விசாரணைக்கு நிறுத்தப்பட்டு, பாரபட்சமற்ற ரீதியில் உரிய தண்டனைகள் வழங்கப்பட்டிருந்தால் அதே பாணியில் தொடர்ந்து கொண்டிருக்கும் கொலை வெறியாட்டங்கள் தொடரமுடியாத நிலை உருவாகியிருக்கும். அதற்குப் பதிலாக அரசாங்கம் உலகின் அபகீர்த்திக்கும், மனிதவதைக்கும் கைகூசாத அன்நிய நாடொன்றின் ஆலோசனையின்படி தமிழ் மக்களது உயிருக்கும், உடைமைகளுக்கும் நாசம் விளைவிக்கும் நடைமுறைகளுக்கு ஊக்கம் அளிப்பது போல் நடந்துகொள்வதன் விளைவே அதிர்ச்சியூட்டும்வவனியா கொலைவெறிஆட்டமாகும்.

"இக்கட்டத்திலாவது அரசு தனது போக்கை மாற்றி வவனியா வெறியாட்டத்திற்கும் வடபகுதியின் ஏனைய பகுதிகளில் தமிழ் மக்களின் உயிர் உடைமைகள் அழிக்கப்பட்ட அநாகரிகச்செயல்களுக்கும் பகிரங்க விசாரணை நடத்த முன்வரவேண்டும்."

## கருணை மழை பொழியும் காவலூர் புனித மரியாள்!

தொன்மை மிகு கத்தோலிக்க பரம்பரையினர் வாழும் பழம்பெரும் துறைமுக நகரம் காவலூர்? போத்துக்கேயர் காலந்தொட்டு இறை பக்தியும், விசுவாசமும் கொண்ட கத்தோலிக்கரின் தாயகமாக விளங்கிவருவது ஊர்காவற்றுறை. கோவில்களால் வளம்பெற்று சின்ன ரோமை என முந்நாளில் போற்றப்பட்ட காவலூரின் மத்தியில் கம்பீரமாய்க்காட்சி தரும் எழில்மிகு ஆலயம் புனித மரியாள் ஆலயமாகும். காவலூரில் தோன்றிய பழைய ஆலயங்களில் இதுவும் ஒன்ருக கருதப்படுகிறது.

1944ம் ஆண்டு புரட்டாதி மாதம் 17ந் திகதி புனித மரியாள் ஆலயம் காலஞ்சென்ற யாழ். ஆயர் பேரருட் திரு கியோமார் ஆண்டகை அவர்களால் அபிஷேகம் செய்யப்பட்டது. அப்பொழுது காவலூர் பங்குத்தந்தையாயிருந்த வண. ஜே. இராசநாயகம் அடிகளாரின் அருமுயற்சியால் ஆலய அபிஷேகத்துக்கென புதிய சிங்கானசமும், மாபிள்பீடமும் கிருதியும் அமைக்கப்பட்டன.

பீடத்தில் கொலுவீற்றிருக்கும் மோட்ச அல்ங்காரியின் அழகுமிகு திருவுருவம் இந்திய சிற்பக் கலையினர் ஒருவரால் மரத்திலே உருவாக்கப்பட்டது என்பர். பத்தர்களின் வழிபாட்டுக்கென கீழே வைக்கப்பட்டிருக்கும் சிறிய சுரூபம் காவலூர் மாலுமிகளால் அன்பளிப்புச் செய்யப்பட்டது என தெரியவருகிறது. யானைத்தந்தத்தினுல் அன்னையின் முகமும் கைகளும் அமைந்திருக்கின்றன. கப்பலிலே மாலுமிகள் வைத்து வழிபட்ட இத் திருவுவம் பின்னர் மாதாவின் ஆலயத்துக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

இவ்வாண்டு புனிதமரியாள் ஆலயம் அபிஷேகம் செய்யப்பட்ட நாற்பதாவது ஆண்டு நினைவுதினம் இன்று கொண்டாடப்படுகிறது. அத்தினத்தை நினைவு கூரும்வகையில் உறுதி பூசுதல் என்னும் திருவருட்சாதனம் யாழ்;ஆயர் பேரருட்திரு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் நிறைவேற்றப்படும், திருதின ஆதாரனைகள் முந்திய மூன்று நாட்களும் நடைபெற்று திருப்பலியும் ஆயர் அவர்களால் நிறைவேற்றப்படும்.

காவலூர் மக்களின் அடைக்கலமும் ஆதரவும் அரணுமாய் விளங்கி மக்களின் அன்புக்குப் பாத்திரமாய் கருணை மழைபொழிந்து காத்துவரும் அன்னையின் திருப்பாத கமலங்களைப் பணிந்துபோற்றுவோமாக.

எஸ். எம். ஜோசப்

## ஒய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இம் மாதம் 24ம் திகதி திங்கட்கிழமை அச்சுவேலி பகுதியிலுள்ளவர்களுக்கு ஒய்வூதியம் வழங்கப்படும். (க

[சாட்டி மாதா ஆலய உற்சவம் இன்று மூன்ரும் நாள்

## காட்டுமம்மா புதியவழி!

சாடடி அந்த மண்ணதனை தளமாக்கி வாழுமெங்கள்
ஆத்தாளே சிந்தாத்திரைமாதா, அகிலத்து நாயகியே
ஆண்டாண்டாய் உன்புகழை,அடியார்கள் கூட்டம்நாம்
பாடிவந்தோம் பாரெங்கும், பரவி உலாவரச் செய்தும்
ஏனம்மா வேதனைகள், ஏராளம் எம்வாழ்வில்
சோதனையோ இதுஉனது, சொல்லுமம்மா நீயே எம்
அவலங்கள் அதுமடிய, பாலிப்பாய் அருளையம்மா
பாதகரும் வீழ்ந்தொழிய காட்டுமம்மா புதியவழி!

—குறிஞ்சி

# வெளிநாட்டு நிருபருக்கு அச்சுவேலியில் கிடைத்த அனுபவம்!

கட்டிடங்கள் எரிவதால் எழுந்த புகை மண்டலத்திலிருந்து சிறிலங்கா ராணுவ மேஜர் ஒருவர் வெளியில் வந்தார். தங்களை அவதூறு படுத்துவதற்காகப் பயங்கரவாதிகள் வீடுகளுக்கு நெருப்பு வைக்கிறார்கள் என்று எங்களிடம் கூறினார். அதே வேளை அவருடைய ராணுவத்தினர் எம்மைச் சூழ்ந்துகொண்டனர். என்னையும் என்னுடன் வந்திருந்த ஏனைய மூன்று நண்பர்களையும் படம் பிடிக்கவேண்டாம் என்று உத்தரவு போட்டார். பின்னர் எங்களைவேறு இடத்துக்குக் கொண்டுபோய் விடவேண்டும் என்றார்.

பொதுவாக அங்கு கிடைத்த எல்லாத் தடயங்களுமே ராணுவத்தினர்தான். யாழ்ப்பாணத்துக்குச் சுமார் 15 கிலோமீட்டர் தொலைவிலுள்ள தமிழ் விவசாயக் கிராமமான அச்சுவேலியில் கட்டிடங்களுக்குத் தீயிட்டுள்ளனர் என்பதை எடுத்துக் காட்டின.

தீவிரவாத இளைஞர் கண்ணிவெடியொன்றைத் தெருவில் புதைத்துவைத்தமைக்கு எதிர் நடவடிக்கையாகவே இவ்வாறு ராணுவத்தினர் நடந்துள்ளனர்.

வன்செயல்கள் அதிகரித்துள்ள சிறிலங்காவின் வட பகுதியில் பாதுகாப்புப் படைகளின்மீது இளைஞர்கள் நடத்தும் போராட்டங்கள், அதையடுத்து ராணுவம் பதில் நடவடிக்கையில் இறங்குவது என்ற நிலைமையின் மாதிரியை இச்சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது.

கடந்த ஆகஸ்டில் பயங்கரவாதிகளின் கண்ணிவெடியொன்றின்மீது ராணுவ டிரக் ஒன்று ஏறியதனால் 6 சிப்பாய்கள் கொல்லப்பட்டார்கள். இதற்குப் பதில்நடவடிக்கையாகச் சில தினங்களுக்குப் பின்னர் ராணுவத்தினர் யாழ்ப்பணத்துக்கு 80 கிலே மீட்டர் தொலைவில் உள்ள துறைமுக நகரமான மன்னாரில் 100க்கு மேற்பட்ட கடைகளையும் வீடுகளையும் எரித்துப் பல தமிழர்களையும் கொன்றனர். வடக்கில் இரண்டு கடற்படையினரைத் தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றதையடுத்து மீன்பிடி துறைமுகமான வல்வெட்டித்துறையில் ஏராளமான வீடுகள் ராணுவத்தினரால் நாசமாக்கப்பட்டன.

மன்னாரில் ராணுவத்தினர்தான் அட்டூழியம் புரிந்துள்ளனர் என்பதை இலங்கை அரசு ஒப்புக்கொண்டுள்ளது. 33 சிப்பாய்கள் ராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு நடந்த எல்லா வீடெரிப்புக்களும் தமிழ்பிரிவினைவாதிகளாலேயே செய்யப் படுவதாக அதிகார பூர்வமாகக் கூறப்பட்டு வருகிறது.

> ''பார் ஈஸ்டேர்ன் எத்கனமிக் றிவியூ' சஞ்சிகையின் நிருபர் ரேட்னி தாஸ்கர் அண்மையில் வடபகுதிக்கு வந்திருந்த பொழுது தமக்கு ஏற்பட்ட அனுவத்தையும் அபிப்பிராயத்தையும் தமது பத்திரிகையில் எழுதியிருந்தார். அதனை இங்கு தமிழில் தருகின்றோம்.
>
> — பெ.

மேற்படி பகுதிச் சம்பவங்கள் பற்றிய விபரங்கள் தெளிவாய் இல்லை. மிகைப்படுத்தப்பட்ட தமிழ் அறிக்கைகளிலும் அரச தரப்பு மறுப்புக்களிலுமே வெளிநாட்டு நிருபர்கள் தங்கியிருக்கவேண்டியுள்ளது.

நானும் இருவர் கொண்ட டி.வி.கமிராகுழுவும், இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபரும் ஆகஸ்ட் 25ம் திகதி காலையில் அச்சுவேலிக்குப் போய்ச் சேர்ந்தோம். பயங்கர வாதிகளுக்கு எதிரான ராணுவத்தின் எரிப்புப் படலம் ஒன்றின் மத்தியில் நாங்கள் போய்ச் சேர்ந்ததன் மூலம் ராணுவத்தினருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தோம். ஒரு பெரும் குண்டுவெடிப்புச் சத்தத்தைக்கேட்டு நாங்கள் அந்த இடத்துக்குச் சென்றோம். தமிழ்ப் பயங்கரவாதிகளால் வீதியில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியொன்று வெடித்ததனால் இந்தச் சத்தம் எழுந்ததாகப் பின்னர் தெரிய வந்தது.

இரகசியத் தகவல் கிடைத்த ராணுவம் அவ்விடத்துக்கு விரைகிறது என்று கேள்விப்பட்டு 'பொடியன்கள்'— அவ்வாறுதான் தமிழர்கள் அவர்களை அழைக்கிறார்கள் அவசரத்தில் குண்டை வெடிக்கச் செய்திருக்கிறார்கள்.

இதனால் எவரும் காயமுறவில்லை ஆனால் எட்டுக் கவச வாகனங்களில் வந்திறங்கிய ராணுவத்தினர் 4 கடைகளையும, வீடுகளையும் எரிக்கத் தொடங்கினார்கள். எரிப்பு வேலை ஆரம்பிப்பதற்குமுன்பே நாங்கள் போய்ச் சென்று விட்டோம். மக்கள் நடமாட்டம் இல்லாத அந்தத் தெருவில் நாங்கள் நடந்து ராணுவம் இருந்த இடத்துக்குச் சென்ற போது பிரிட்டிஷ் தயாரிப்பான ஒரு கவச வண்டி தனது யந்திரத் துப்பாக்கியை எங்களை நோக்கிக் குறிபார்த்துத் திரும்பியது. அதிலிருந்த மூன்று சிப்பாய்கள் சுடும் நிலைக்குத் தயாரானார்கள்.

கிலி கொண்ட ராணுவத்தினர் கண்மூடித் தனமாகச் சுட்டுத் தள்ளுவார்களென்று ஏற்கனவே உள்ளூர்த் தமிழர்கள் மூலம் நாம் அறிந்திருந்ததால் சுமார் 25 யாருக்கு அப்பால் நின்று விட்டோம். கவச வண்டியொன்று முன்னால் வந்து அதன் பீரங்கி வாயை எங்களை நோக்கி வைத்துக் கொண்டது.

சுமார் பத்து நிமிடம் அசையாமல் நின்ற பின் ஒரு சிப்பாய் எங்களை அப்பால் போகும்படி சைகை காட்டினார். நாங்கள் முன்பிருந்த இடத்துக்குத் திரும்பினோம். சிறிது நேரத்தின்பின் ராணுவ அணியொன்று எங்களைநோக்கி வந்தது. றேடியோவுடன் காணப்பட்ட ஒரு இளம் அதிகாரி எமது தமிழ் சாரதியை அழைத்து ''நீதமிழனா, சிங்களவனா'' என்று கேட்டார். சாரதி பயத்தில் உச்சத்தில் கைகளைத் தலைக்குமேலே உயர்த்திக்கொண்டு தாம் தமிழர்தான் என்று பதிலளித்தார். அதன்பின் தங்களின் தளபதி எங்களை பார்க்க விரும்புவதால அவரிடம் கொண்டுபோகும்படி உத்தரவிட்டார். அந்தத் தளபதியின் பெயர் பி. ஏ. கருணதிலக்க என்று பின்னர் அறிந்தோம்.

மேஜர் கருணதிலக்கா இருந்த இடம் கவசவாகனங்களினால் சூழப்பட்டிருந்தது. அவ்வாகனங்களின் துப்பாக்கிக் குழல்கள் சுழன்றவாறு நோட்டமிட்டுக்கொண்டிருந்தன. அவ்விடத்திலேயே முதல் தடவையாக ஒரு கட்டிடத்தில் மட்டுமிருந்து புகை எழுவதை நாம் முதல் தடவையாகக் கண்டோம்.

கருணதிலக்கா எம்மைக் காண வெளிப்படையாக விரும்பியிருக்கவில்லை. நாம் அந்த நகரத்திலிருந்தும் இராணுவப் பாதுகாப்புடன் வெளியேறவேண்டுமென்று அவர் கூறினார்.

நாம், அருகேயிருந்த காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்துக்குக் கூட்டிச் செல்லப்பட்டோம். அங்கு எமது பத்திரிகையாளருக்கான அடையாளங்கள், சான்றுகள் யாவும் பதியப்பட்டுப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டோம்.

ராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. டக்ளஸ் லியனகே 'ஜெரூசலம் போஸ்ட்' பத்திரிகைக்குப் பேட்டியளிக்கையில் ஐந்து இஸ்ரேலிய அதிகாரிகள் கொழும்பில் இருப்பதாகவும், அவர்கள் மூலம் பயங்கரவாத எதிர்நடவடிக்கை சம்பந்தமான நிபுணத்துவ உதவிகளை கொழும்பு பெற்றுவருவதாகவும் கூறியிருந்தார்.

ஆனால் இலங்கை அரசாங்கம் இஸ்ரேலிய விவகாரம் குறித்து முன்னர் மறுப்புத் தெரிவித்ததுடன் அந்நாட்டுடன் தனக்கு இராஜதந்திர உறவுகள் எதுவுமில்லையென்றும் தெரிவித்திருந்தது.

டக்ளஸ் லியனகேயின் இஸ்ரேலியப் பேட்டியைத் தொடர்ந்து, தமிழ்பயங்கரவாதிகள் செயல்படும் இடங்களில் வீடுகளை எரிப்பதுடன் ஏனைய பயமுறுத்தல் நடவடிக்கைகளில் இறங்கும் போக்கை அரசுகைக் கொள்ளுவது இஸ்ரேலின் ஆலோசனைப்படியேயாகும் என கொழும்பில் அவதானிகள் கருதுகின்றனர்.

இஸ்ரேலியர்களும் இது போன்றே பயமுறுத்தல்களில் ஈடுபடுபவர்கள் அவர்கள் அப்பாவிகளான பலஸ்தீன மக்களை பாலஸ்தீன விடுதலை இயக்கப் போராளிகளுக்கு ஆதரவளிப்பதைத்தடுத்துநிறுத்த அம் மக்களின் வீடுகளுக்கும் உயிர் உடமைகளுக்கும் இதுபோன்றே சேதங்களை ஏற்படுத்துவார்கள்.

இத்தகைய ஒரு கையாளல் மூலம் தமிழ் மக்கள் பயங்கரவாதிகளை வெறுக்கும் போக்கைக் கொண்டிருப்பார்களா? அல்லது இதன் மூலம் பயங்கரவாதிகள் மீதான தமிழ் மக்களின் அபிமானம் மேலும் அதிகரிக்குமா? என்பதற்குக் காலந்தான் பதில் கூறும். (கி)

---

# ''தமிழருக்கு எதிரான அட்டூழியம்!'' தமிழீழ விடுதலை அணி கண்டனம்!

[யாழ்ப்பாணம்]

தமிழ் மக்கள் அனுபவிக்கும் கஷ்ட நிலைமைகள் குறித்து அரசாங்கத்தைக் கண்டித்து 'தமிழீழ விடுதலை அணி' அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையின்பிரதிகள் சகல வெளிநாட்டுத்தூரதரகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;-

''ஸ்ரீலங்கா ஆயுதப்படைகளால் தமிழ் மக்கள் சொல்லொணாத் தொல்லைகளுக்கு ஆளாகின்றனர், சாதாரண பொதுமக்கள் மட்டுமன்றி மாணவர்கள், பெண்கள் உட்படப் பலர்இத்தகைய கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இதுமட்டுமல்லாமல் வவுனியா, திருகோணமலையில் ஆயுதப்படைகளால்பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏற்கனவே வல்வெட்டித்துறை, பருத்தித்துறைப் பகுதிகளில் கைதுசெய்யப்பட்ட இளைஞர்களில் நூற்றுக்கு மேற்பட்டோர் இன்னமும் விடுதலை செய்யப்படாமலே உள்ளனர். இவர்களில் சிலர் எங்கே என்ற விபரம் கூடத் தெரியவில்லை, கைது செய்யப்பட்ட இளைஞர்கள் பலர் சிறையில் வைத்து சொல்லொணாத் துயரங்களை அடைந்துள்ளனர்.

தமிழ் மக்களின் அரிய பொக்கிஷமான யாழ். நூலகத்தை எரித்தனர். ஆனால் இது போன்ற அநாரிக செயல்கள் இனிமேல் நடைபெறாது என நம்பி இருந்த வேளையில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி நூலகம் எரிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் உயிருக்கும் உடமைகளுக்குக் இங்கு உத்தரவாதம் இல்லை. (மா)

---

## சாட்டி மாதா உற்சவம் ஆரம்பம்

(வேலணை)

வேலணை சாட்டி சிந்தாத்திரை மாதா உற்சவம் நேற்று முன் தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

வட பகுதியின் பிரசித்தி பெற்ற யாத்திரைத்தலமான இவ் வாலயத்திற்கு வரும் பக்தர்களின் பாதுகாப்பிற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய பட்டுள்ளன தினமும் மாலை ஐந்து மணிக்கு நவநாள் பூஜை நடைபெறுகிறது. போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. வண.பிதா.றெஜீஸ் இராசநாயகம் உற்சவஏற்பாடுகளைக் கவனித்து வருகிறார்கள்.

---

## இன்று திறப்பு விழா

(கிளிநொச்சி)

கரைச்சி வடக்குபல நோக்கு கூட்டுறவு சங்க குமரபுரம் மகளிர் குழுவினரின்தையல்,பன்ன வேலை நிலையத்தை அரசாங்க அதிபர் என்.ஜெயநாதன் இன்று ஆரம்பித்துவைக்கிறார்.

இத் திறப்பு விழா வைபவத்திற்கு பிரஸ்தாப சங்க தலைவர் இ.கார்த்திகேசு தலைமை தாங்குகிறார். கூட்டுறவு உதவி ஆணையாளர் சி.நித்தியானந்தன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

---

## காணமல்போன 2 சிறுவர்கள்

(யாழ்ப்பாணம்]

முல்லைத்தீவில் காணமற் போன மில்ரோய் அன்ரனி [12 வயது] தங்கத்துரை அல்பிரட் [13 வயது] ஆகிய இரு சிறுவர்களையும் கண்டுபிடிப்பதற்கு முல்லைத்தீவ அரசாங்க அதிபர் திரு கே. ஞானச் சந்திரன் முயற்சி எடுத்துள்ளார்.

இச் சிறுவர்களைத் தேடும் முயற்சிக்கு பொலிசாரின் உதவியும் நாடப்பட்டுள்ளது.

சிறுவர்களின் பெற்றோர் அரசாங்க அதிபருக்கு புகார் செய்ததைத் தொடர்ந்து இராணுவமுகாமிற்குபெற்றோர்சென்று பார்வையிட அவர் ஏற்பாடு செய்தார்.

சிறுவர்கள், இராணுவமுகாமில் இல்லை என்பது தெரியவந்துள்ளதால், வெளியில் தேடுதல் முயற்சி நடைபெற்று வருகிறது. [க]

---

# ''யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம் அரசுடன் தொடர்பில்லாத தனிப்பட்ட ஸ்தாபனம்

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாண பொதுமக்களின் பணத்துடன் கட்டிஎழுப்பப்பட்ட யாழ். ஐக்கிய வியாபார சங்கத்தில், கொள்ளைகள் மேலும் நடைபெறுமானால், சங்கத்தை ஸ்தாபித்த மக்களுக்கு நிதானமான விலையில், பொருட்களை சமபங்கீடு அளிக்கும் முயற்சி தோல்வியடையும், ஆயிரத்துக்கு மேற்பட்ட பங்காளிகளை பணநஷ்டத்தில் தள்ளும் நிலை ஏற்படுவதுடன், சுமார் 250 ஊழியரும் பாதிக்கப்படுவர்.''

யாழ். ஐக்கிய வியாபார சங்கத்தில் நடைபெற்ற கொள்ளை தொடர்பாக சங்கத்தினர் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் 65 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்தாபிக்கப்பட்டது. இந்த ஸ்தாபனத்தில் 1300 பங்காளிகள் 15 லட்சம் ரூபாவைப் பங்குப் பணமாக வைத்திருக்கிறார்கள். யாழ்ப்பாணக்குடாநாட்டில்கூட்டுறவு முறைபிரதிபலிக்குமுன்பே இந்தஸ்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டது நிதானமான விலையிலும்சமமான நீதியானபங்கீட்டு முறையைக் கையாண்டுவந்த பொழுதும் பங்காளிகளுக்கும் அவர்களுடைய முதலீட்டிற்கும் சேரவேண்டிய திருப்திகரமான பங்கு இலாபத்தைக் கொடுத்துவந்தது.

அண்மையில் இந்த ஸ்தாபனம் எதிர்பாராத மாபெரும் நஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது இவ்வருடம் ஏப்ரல் மாதம் ஸ்தாபனத்தின் பல கோடி ரூபா பெறுமதியான பிரதான கட்டிடம். தளபாடம், உபகரணம், வாகனங்கள், வியாபாரப் பொருட்கள் சகலதும் தீக்கிரையாக்கப்பட்டன. மேலும் கடந்த ஆறுமாத காலத்திற்குள் இயக்கங்களைச் சேர்ந்தவர்களாளோ அல்லது இயக்கங்களின் பெயரைப் பாவித்து கொள்ளையடிக்கும் சுயநலக் கோஷ்டிகளாலும் இந்த ஸ்தாபனம் பலமுறை கொள்ளையடிக்கப்பட்டஉது. இப்படிப்பட்ட கொள்ளை முயற்சி மூலம் ஒரு உதவி முகாமையாளர் துப்பாக்கிச் சூட்டினால் மரணமடைந்தார்;

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கொள்ளைகளை அவதானிக்கும் பொழுது இவை அரசாங்கத்தோடு சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களையே இலக்காக்கி இருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால் அரசாங்கத்துடன் ஒருதொடர்பும் இல்லாத இந்த ப்ரத்தியேக வியாபார ஸ்தாபனம் பல முறை கொள்ளையை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது இந்த ஸ்தாபனம் ஐக்கிய வியாபார சங்கம் என்ற பெயருடன் இயங்குவதால் இதை அரசாங்கத்தின் கீழ் இயங்கும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடன் தவறான முறையில் கருதப்படுகிறதோ என்ற ஐயம் ஏற்பட்டுள்ளது. இந்த ஐக்கிய வியாபாரச் சங்கத்திற்கும் கூட்டுறவு முறையில் நடைபெறும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஒரு தொடர்பும் இல்லை.

(க)

# “இறந்தவர்போல் விழுந்து கிடந்து தப்பிப் பிழைத்தேன்!”

## வவனியா கோரத்திலிருந்து மீண்ட இளைஞரின் பயங்கர அனுபவம்

(என். கே. துரைசிங்கம்)

‘‘துப்பாக்கிச் சன்னங்கள் என்னுடலைத் உராய்ந்துசென் றன. கண்களை இறுக மூடிக் கொண்டு இறந்தவன்போல் பாசாங்கு செய்தேன். எந்த நேரமும் என்மீது குண்டுகள் பாயலாம் என்ற பீதியில் எனது இதயம் துடித்துக் கொண்டிருக்கிறது. எங்கும் மரணஓலங்கள்... ஐயோ... அம்மா... தண்ணீர்... என்று முனகலிடையே கேட்ட அந்த சத்தங்கள் இன்னும் என் காது களில் ரீங்காரமிட்டபடி தான இருக்கின்றன’’.

வவனியாவில் நடந்த கோரக்கொலையிலிருந்து தப் பிய தச்சன்தோப்பைச்சேர்ந்த 23 வயது தடசணாமூர்த்தி என்ற இளைஞர் அந்தப் பயங் கரச் சம்பவத்தையும், தனக்கு நேர்ந்த அனுபவத்தைம் இப் படி வர்ணித்தார்.

இந்தச் சம்பவம் பற்றி அவர் கூறும்பொழுது அவரது முகத்தினில் சோகத்தின் ரேகைகள் படர்வதைப் பார்த்தேன். கண்களின் கலக கத்துனூடேதான் எவ்வாறு தப்பினேன் என்பதை விபரித் தார்.

‘‘சம்பவம் நடந்த பஸ்ஸில் பின் ஆசனத்தில் தான் நான் அமர்ந்திருந்தேன். பஸ்ஸில் டி. வி. யில் ‘சாட்சி’ என்ற படம் ஓடிக்கொண்டிருந்தது. படத்தை பார்த்துக்கொண் டிருந்தவர்கள் ஒருபுறமிருக்க, சிலர் நித்திரையில் ஆழ்ந்திருந் தார்கள். நேரம் 2-30 மணி யிருக்கும் திடீரென டி. வி. நிற்பாட்டப்பட்டது, பஸ்ஸி னுள்ளே காற்சட்டைபோட்ட ஐவர் துப்பாக்கியுடன் நிற் பதைக் கண்டேன். ஒருவர் தாடிமீசையுடன் காணப்பட் டான் அவனைப் பார்க்கும் பொழுது மிகவும் பயங்கரமாக இருந்தது. சிங்களத்தில் ஏதோ பேசினார்கள். இவர்களில் இரு வர் சீருடையில் காணப்பட்ட னர். அவர்களிடமிருந்தது ‘மெஷின் கண்’.

### பாதை மாறிய பஸ்

பஸ் வேறு பாதையில் திரும் பிச் செல்வதைக் கண்டேன். பாதை மாறி ஓடிய பஸ் காட்டுமரங்களோடு உராய்ந்து செல்வதையும் உணர்ந்தேன். ஏதோ ‘சோதனை’யிடப் போகிறார்கள். அதுதான் எங் களை இங்கே அழைத்து வந் துள்ளார்கள் என்று நினைத் தேன். பஸ் நிறுத்தப்பட்டது.

பஸ்ஸிலிருந்த ‘லைட்டு’களை அணைத்தார்கள். முன்ஆசனத் திலிருந்த சாரதியை வெளியே இழுத்துச் சென்றார்கள். தொடர்ந்து வெடிச் சத்தங்கள் கேட்டன சாரதியைச் சுட்டு விட்டார்கள் என்பதை உள் ளிருந்தே ஊகித்துக்கொண் டேன்.

‘‘பின் பஸ்ஸிற்குள்ளே வந்து எங்களிடம் இருந்த பணம், நகை யாவற்றையும் துப்பாக்கிமுனையில் விரட்டி பறித்தெடுத்தார்கள். நாங்கள் ஒவ்வொருவரும் அவர்களுக்கு பயந்து எங்களிடமிருந்த எல்லாவற்றையும் கொடுத் தோம். இருவர் இவ்வாறு கொள்ளையடிக்க மற்றவர்கள் ஒவ்வொருவராக வெளியே இறக்கிச் சுட்டுக்கொண்டு நின்றார்கள். நாங்கள் ஒவ் வொருவரும் மரணத்தின் வாச லுக்கு வந்துவிட்டோமென் பதை உணர்ந்தோம். அழு தோம்; சிலர் ‘கர்த்தரே’ எங் களைக் காப்பாற்றுங்கள் என்று ஜெபம்செய்துகொண்டிருந் தார்கள்.

‘‘எனக்கு வீட்டிலுள்ள எனது தங்கைகளின் முகமும் அயலவர்களின் முகங்களும் ஒவ்வொன்றாக வந்துசென் றன.

### பாவமில்லா பொய்

‘ஒவ்வொருத்தராக அழைத் துச் சென்று வெளியேவைத்து சுட்டவர்கள் இப்பொழுது என்னையும் இழுத்தார்கள். நான் ‘‘ஐயோ என்னை விட்டு விடுங்கள் உங்களை கடவுளாக நினைத்து [illegible]கும்பிடுகிறேன் ஐயா’’ என்று அவர்களின் காலில் விழுந்தேன்; கெஞ்சி னேன்; மன்றாடினேன்; பாவி கள் கேட்டால்தானே ‘மெசின் கண்’ணால் தாக்கினார்கள். கீழேபோட்டு உதைத்தார்கள்; எனது வேதனையைச் சகிக்க முடியாத அருகிலிருந்த யுவதி களில் ஒருத்தி ‘‘இவர் என் கணவர்; இவரை ஒன்றும் செய்யாதீர்கள்’’ என்று வேண் டிக்கொண்டார். அந்த கொலை காரரர் கேட்பதாக இல்லை; சிங்களத்தில் ஏதோ கத்தினார் கள்; தொடர்ந்தும் எனக்கு அடித்துக்கொண்டேயிருந்தார் கள்.

### மடக்கும் எண்ணம்

‘‘என்னுடன் அருகிலிருந்த இன்னும் இருவரையும் இழுத் துக்கொண்டு வெளியே வந் தார்கள். வரும்பொழுது என் னுடன் வந்தவர்களைக் கேட் டேன். ‘‘நாங்கள் இனிச் சாகிற ஆட்கள் தானே இவர்

[7-ம் பக்கம் பார்க்க]

## இன்றைய பலன்

மாதம்—புரட்டாதி
திகதி—1(17-09-1984)
வாரம்—திங்சள்
திதி—ஸப்தமி இரவு 10-23 வரை
நக்ஷத்திரம்—ரோகினி இரவு 7-21வரை

மேடம்:- சிந்தனையில் தடு மாற்றம் ஏற்படும் நண்பர்ஒரு வரை பகைத்துக்கொள்ள நேரிடும் தொழில்துறையில் மறைமுக எதிர்ப்புக்களுக்கு மிடம் உண்டு.

இடபம்:- தெய்வநம்பிக்கை யில் அதிக ஆர்வம் பிறக்கும் புண்ணியஸ்தல யாத்திரை யொன்றும் மேற்கொள்ளப் படலாம் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் தென்படும்.

மிதுனம்:- குடும்பவாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக் கும் உறவினர் ஒருவரின்வருகை உற்சாகத்தை அளிக்கும்எதை யும் அலசி ஆராயவிரும்பு வீர்கள்.

கடகம்:- மோதவரும் பகை மோசடிகள் நடக்கும் சகோதர வழியால் சஞ்சலம் ஏற்பட லாம் அதிகசிந்தனைக்கு இடங் கொடாது துணிவேதுணை யென இருக்கவும்.

சிங்கம்:- மாணவர்கள்வாழ் க்கையில் முன்னேற்றம் உண்டு தாய்வழி ஆதரவு தாராள மாகக்கிடைக்கும்.

கன்னி:- மதிப்பு உயரும் பொதுமக்கள் ஆதரவும் கிடை க்கும் புத்திரரால் புகழும் உண்டு புதினமும் கேட்பீர்.

துலாம்:- அவசர புத்தியி னால் விபரீதங்கள் விளையும் கோபத்தையடக்கின் நிலமை சீர்பெறும்.

விருச்சிகம்:- களஸ்திரவழி யால் மகிழ்ச்சிகரமான சம்ப வம் இடம் பெறும் நீண்ட நாள் பகைஇன்று நிவர்த்தி யாவதற்கு இடமுண்டு.

தனுசு:- சிறியவிடயம் கூட இன்று சிரமமாக தோன்றும் உள்வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும் வாய்வுப்பதார்த் தங்களைத் தவிர்த்துக்கொள்ள வும் திருப்தியற்ற தினம்.

மகரம்:- தக்கசமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக் கும் தெய்வநம்பிக்கை மேலி டும் ஸ்தலயாத்திரை ஒன்றும் மேற்கொள்ளப்படலாம் நினை த்ததை சாதிப்பதில் இன்று முன்னணியில் நிற்பீர்கள்.

கும்பம்:- தொழில் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றத் திற்கு வழிகோலப்படலாம் இதன் மூலம் பதவி உயர்வு கிடைக்கலாம் பேட்டிகாண் பதற்கு ஏற்றதினம்.

மீனம்:- அதிர்ஷ்டகரமான தினம் சிலர் வாழ்க்கையில் திடிர்வரவுகளுக்கும் இடம் உண்டு தொழில்புரியும் இடத் தில் சகஊழியர்களின் ஆதர வைப் பெறுவீர்கள்.

திருமலை
வே. ரவீந்திரன்

யாழ். குடாநாட்டில் ஏற்பட்ட பதட்டம் காரணமாக - தடங்கலான

ARPICo

# ஆர்ப்பிக்கோ ஸ்தாபனத்தாரின் மற்றுமொரு சலுகை

## இச்சலுகை யாழ்ப்பாண மக்களுக்கு மட்டுமே

எமது சகல பொருட்களுக்கும் இன்றுமுதல்

# 10% விசேட விலைக்கழிவு

இச்சலுகை 30-09-1984 வரை மட்டுமே

கொழும்பு, கண்டி, காலி, அனுராதபுரம் ஆகிய பகுதிகளில் கடந்த மாதம் வழங்கப்பட்ட சலுகை இம் மாதம் யாழ். மக்களுக்கு வழங்கப்படுகிறது. இச்சலுகை வியாபாரிகளிடம் பேரம்பேசிப் பெறுவ தில்லை, குறிப்பிட்ட விலைகளில் உடனடியாக இக் கழிவுகிடைக்கிறது.

- உருக்கிலான நீடித்த பாவனைக்குகந்த சாப்பாட்டு மேசைகள். ரூபா 850-00 முதல் ரூபா 2200-00 வரை.
- குஷன் வைக்கப்பட்ட சாப்பாட்டு நாற்காலிகள், சுழலும் கதிரைகள் விலை- ரூபா 275-00 முதல் ரூபா 1500-00 வரை.
- இன்னும் எத்தனையோ தளபாடங்கள் அத்தனையும் உங்கள் சீதனங்கள்.

காலத்தால் அழியாத கற்பனைத்திறன்மிக்க ‘‘ஆர்ப்பிக்கோ’’ தளபாடங்கள் இலங்கை எங்கும் பிரபல்யமானவை.

உங்கள் தேவைகளுக்கு

யாழ்ப்பாண ஏக விநியோகஸ்தர்கள்

## டிருன்ஸ்லங்கா மாக்கற்றிங் லிமிட்.,

இல. 01, நவீனசந்தை, (மேல்மாடி) யாழ்ப்பாணம். போன்:23027

## றிச்சாட் பீரிஸ் அன்ட் கம்பனி லிமிட்.,

69, ஹைட்பார்க் கோணர், கொழும்பு-2 போன்-25705-6

## ரூபவாஹினி மேலதிகப் பணிப்பாளர்

(கொழும்பு)

ரூபவாஹினி தொலைக்காட்சி கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப் பகுதி மேலதிகப் பணிப்பாளராக திரு.பி விக்னேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார். பணிப்பாளர் திருமதி.ஞானம் இரத்தினம் ஓய்வுபெற்று வெளிநாடு செல்வதையடுத்து இவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அறிவிப்பாளராகவும், தயாரிப்பாளராகவும் பணியாற்றிக் குறுகிய காலத்தில் தனது திறமையினால் முன்னேறி ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக பதவி பெற்றார். இப்பொழுது இந்தப் புதிய பதவி கிடைத்துள்ளது.


**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30
Jan - Michael Vincent
**DAMNATION ALLEY**
Thrilling - Adventure

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி-மஞ்சுளா
**உத்தமன்**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - ஸ்ரீபிரியா,
எம். ஜி. ஆர். - கமல்
**நட்சத்திரம்**

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
எம். ஜி. ஆர்.-சரோஜாதேவி
**அன்பே வா**
(புதிய பிரதி)

**ஹரன்** (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா-நம்பியார்
**அரசகட்டளை**
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி.

**சாந்தி** (யாழ்நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
Robert Redford in
'BRU BAKER'
- Action Packed -
''வேக்பீல்ட்'' சிறைச்சாலையில் நடக்கும் சித்திரவதைகளைச் சித்தரிக்கும் கதை. சிறைச்சாலையில் தேடப்படுபவர் சிறைச்சாலை அதிகாரியே.

**வின்ஸர்** [யாழ்.]
16—18
தினசரி 10-30, 2-00, 4-30
COUNT OF MONTE CHRISTO
சிறுவர் முதல் வயோதிபர் வரை பார்த்து ரசிக்க வேண்டிய வாள் சண்டைகள் திகில், மர்மம் நிறைந்த அரச காவியம்.

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
ஜெய்சங்கர்
தேங்காய் சீனிவாசன்
**காதலிக்க வாங்க**
(புதிய பிரதி)

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
**Coming Home**
(Strictly for adults-Sex)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 4-45,
அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க 17-9-84 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
**TEN**
(Adults only)


## இறந்தவர்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் ஒருவரையாவது மடக்குவோம்'' என்ற பொழுது அவர் சொன்னார். ''இவ்வளவு பேரையும் சுட்டுவிட்டார்கள்.'' ஒன்றும் செய்யமாட்டார்கள்.' என்று வெளியேயிருந்தபிணங்களைக் காட்டிக் கூறினார். அவர் கூறி முடிக்குமுன் துப்பாக்கிக் குண்டுகள் சராமாரியாக அவர் மீது பாய்ந்தன. அவர் சரிந்து கீழே விழுந்தார். அவருடன்சேர்ந்து நானும் கீழே வீழ்ந்தேன். கீழே விழும் பொழுது ''ஐயோ.....'' என்று அலறியபடியே விழுந்து இறந்தவர் போல் இறந்தவர்களுடன் இரத்தவெள்ளத்தில் கிடந்தேன். நானும் இறந்துவிட்டதாக அவர்கள் நினைத்தார்கள். என்னருகில் வந்துகாலால் தட்டிப்பார்த்தார்கள்; நான் அசையாது கிடந்தேன். நான் இறந்துவிட்டதாக நினைத்துப் பஸ்ஸினுள்ளே சென்று மேலும் சிலரை இழுத்துவந்து சுட்டார்கள்.

''இப்பொழுது அந்தச் சடலங்களுடன் நானும் உயிருள்ள ஒரு சடலமாக இருப்பதாக உணர்ந்தேன். எழும்புவதற்கும் முயற்சித்தேன். என்னால் எழும்ப முடியாதிருந்தது. ஒருவேளை இறந்தபின் கனவுதான் காண்கிறேனோ...... இது ஒரு கனவாக இருக்கக்கூடாது என்று நினைத்தேன்.

### எழுந்து பார்த்தார் சுட்டார்கள்.....

''என்னருகில் என்னைப் போல் இன்னுமொருவர் உயிருடன் படுத்திருந்தார். இருவரும் கதைக்கமுடியாதநிலை. அவர்கள் போய்விட்டார்களா என்று என்னைப்போல சூடுபடாமல் கீழே இரத்தவெள்ளத்தில் கிடந்தவர் எழுந்து பார்த்தார். ஒருகணம் தான் பாவிகள் சுட்டுவிட்டார்ககள். அவரது உடல் அப்பொழுது மண்ணை முத்தமிட்டது. இதைப் பார்த்தபின் எழும்புவதற்கே முயற்சிக்கவில்லை.

''எவ்வளவு தூரம் இவ்வாறு சடலங்களுடன் உயிருள்ள சடலமாக இருந்திருப்பதே தெரியவில்லை. ''இவ்வளவு சனமும் இறந்துவிட்டதால் நான் இறந்தால் என்ற நினைப்புடன் எழுந்து பார்த்தேன். அவர்களைக் காணவில்லை- சற்றுத்தூரத்தில் அழுகுரல்ஒன்று கேட்டது. எழுந்து அங்கு சென்றேன், அவரும் என்னைப்போல ஒருவர். உடனே அவரையும் அழைத்துக்கொண்டு காட்டுப்பாதை வழியாக அலைந்து திரிந்துவிட்டு விடிந்ததும் சம்பவம் நடந்த இடத்திற்கு எப்படியோ வந்தபோது இரு இளம் பெண்களும் எங்களோடு சேர்ந்து கொண்டார்கள். அவர்கள் தங்களுக்கு நடந்த சம்பவத்தைப்பற்றிக் கூறி அழுதார்கள். ''நஞ்சிருந்தால் தாருங்கள் .... வீடுசெல்லாமல் இங்கேயே இறந்துவிடுவோம்'' என்றார்கள் அவர்களுக்கு ஆறுதல் சொல்ல இன்னும் சிலருடன் பஸ்ஸிற்குள் சென்று எமது பொருட்களைப் பார்த்தோம், ஒன்றும் உருப்படியாக இல்லை. சடலங்கள் எல்லாம் சின்னாபின்னமாக்கப்பட்டிருந்தன. நாங்கள் ஒழுங்குப்படுத்தி வைத்துவிட்டு அந்த இளம் பெண்களையும் அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்தோம்.''

# கல்லுண்டாய் வெளியில் தொடரும் காடைத்தனம்!

(யாழ்ப்பாணம்)

கல்லுண்டாய் வெளியில் காடையர்களதும், கொள்ளையர்களதும் அட்டகாசம் அதிகரித்து வருவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இரவு நேரங்களை விட பட்டப் பகல் நேரங்களிலேயே இவ்வித அதிருப்தியான சம்பவங்கள் அப்பாவிகளுக்கு நேரிடுகிறதாம்.

இந்த அசம்பாவித செயல்களில் ஈடுபடுபவர்கள் இயக்கங்களின் பெயரைச் சொல்லி போலித்துப்பாக்கியைக்காட்டி பயமுறுத்தி கொள்ளையடிக்கிறார்களாம். தங்கள் கொள்ளை பலிக்காமல் போகவே சண்டித்தனம் செய்வதுடன், முன்பின் உ ராமல் தாக்கியும் விடுகிறார்களாம்.

இப்படியான மிரட்டல் பேர்வழிகளை கொண்ட கோஷ்டியினரிடம் சிக்கி கொண்டவர்களில் யாழ். மாநகரசபை மின்சார நிலைய விகிதர் ஒருவரும் அடங்குகிறார்.

இவர் தமக்கேற்பட்ட அனுபவத்தைச் சொன்ன பொழுது வேடிக்கையும் வேதனையும் கலந்திருந்தது.

''சக உத்தியோகத்தர் ஒருவரின் மகளின் பூப்புனித நீராட்டு விழாவுக்கு கல்லுண்டாய் வெளியூடாக வட்டுக்கோட்டைக்கு 5 சக உத்தியோகத்தர்களுடன் 3 மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தோம். நண்பகல் 1-30மணி இருக்கும்.

''எங்களைப் பின்தொடர்ந்து வெள்ளை நிற பியட்கார் ஒன்று வந்து கொண்டிருந்தது. 11ஸ்ரீ 740 அதன் இலக்கம். கடைசியாச் சென்று கொண்டிருந்தது எங்கள் மோட்டார் சைக்கிள். எங்களை விலத்திச் சென்ற அந்தக்காரில் இருந்த ஒருநபர் தலையை நீட்டி வாய்க்கு வந்தபடி எங்களைப் பார்த்துப் பேசினார்.

''ஏன் விலகிப்போகக் கூடாதே'' என்று நான்சொன்னேன்.

''நாங்கள் விடுதலை இயக்கத்தை சேர்ந்தவர்கள் ஒரு அலுவலாகப் போகிறோம்'' ''டே நீயாரடா?'' என்று காரை நிறுத்திக் கொண்டே ஒருநபர் கேட்டார்.

நான் நீங்கள்-நாங்கள் என்று பண்பாகவும்- மரியாதையாகவும் சொல்கிறோம்! நீர் என்ன 'எடா, பிடா' என்று கதைக்கிறீர்? என்றேன் நான்.

''இதற்குள் இருந்த ஒருவர் திடீரென துப்பாக்கிபோன்ற உருவமைப்பைக் கொண்ட ஒன்றால் எங்களை நோக்கி எறிந்தார். இதனால் எனக்குப் பின்னால் இருந்த விகிதரின் கை உடைந்து இரத்தம்கொட்டியது.

''நாங்கள் மோட்டார் சைக்கிளைவிட்டு இறங்கினோம். ஒரு நபர் எங்களுக்குக்கிட்ட நெருங்கிவந்தார். மதுநெடில் வீசியது,

''இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் இப்படியா நடந்து கொள்வது? எந்த இயக்கம் அடிக்கவும் பண்பில்லாமல் பேசவும் பழக்கியிருக்கிறது? நீங்கள் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று நான் அதட்டினேன்.

பின்னர் ஏதோ ஒரு வகையாக மனம் மாறி எங்களுக்கு கீழ்ப்படியத் தொடங்கி விட்டார்கள்- ''காரில் ஏறுங் கா; மருந்து கட்டுவோம்'' என்றார்கள். நாங்கள் மறுத்துவிட்டோம். பின்பு சமாதானம் அடைந்து மன்னிப்புக் கோரினார்கள்.

**ரூபவாஹினி**

### இவ்வாரத் தமிழ் நிகழ்ச்சிகள்

திங்கட்கிழமை 17 ம் திகதி
மாலை
7-15 கலையரங்கம்- வில்லுப்பாட்டு சபாசதாசிவம்

செவ்வாய்கிழமை 18 ம் திகதி
மாலை
6-30 நம்நாட்டுத் திரைப் படத்தொடர் (அவள் ஒரு ஜீவநதி)
7-15 விவரண நிகழ்ச்சி

புதன்கிழமை 19 ம் திகதி
மாலை
5-30 இது உங்கள் நாடு [தமிழ்)

வியாழக்கிழமை 20 ம் திகதி
மாலை
7-15 கா நாம்பரி

வெள்ளிக்கிழமை 21 ம் திகதி
மாலை
6-00 விளையாட்டுப்பயிற்சி [தமிழில் உரை]

### இன்று

மாலை
5-30 நாட்டுவளம் [சிங்களம்]
5-35 வூடி வூட் பெக்கர் கார்டூன் சித்திரம் [ஆங்கிலம்]
6-00 பௌதிகக்கல்வி [ஆங்கிலம்]
6-25 அநாகரிக தர்மபால தினம் [சிங்களம்]
6-35 ஊரும் உலகும் சஞ்சிகை நிகழ்ச்சி [தமிழ்]
6-55 செய்திகள் [தமிழ்]
-15 கலையரங்கம்
77-45 'ரேகா' நாடகம் [சிங்களம்]
8-15 செய்திகள் [சிங்களம்]
8-35 விஷேட நிகழ்ச்சி [சிங்களம்]
8-55 யெஸ்மிஸ்டர் [ஆங்கிலம்]
9-30 செய்திகள் [ஆங்கிலம்]
10-00 பொம்பா த ஜங்கிள் போய் [ஆங்கிலம்]
10-30 உலகச்செய்திகள்
10-35 பொம்பா [தொடர்ச்சி]
11-15 நிகழ்ச்சிகள் முடிவு

# குடியேறிய அகதிகளை வெளியேற்ற முயற்சி!

(சாவகச்சேரி)

தேவிபுரத்தில் குடியேறியுள்ள 12 அகதிகள் குடும்பங்களை அங்கிருந்து வெளியேறும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜூலைக் கலவரத்தினைத் தொடர்ந்து மலையகப்பகுதியிலிருந்து குடிபெயர்ந்த இக்குடும்பங்கள் குருநகர் அகதிகள் முகாமில்தங்கியிருந்தன இவர்களை யாழ். லயன்ஸ் கழகம் மேற்படி காணியில்குடியேற்றியது. இதனைத்தொடர்ந்து இக்குடும்பங்கள் காடாய்க் கிடந்த அந்த நிலத்தினைத் திருத்தி அமைத்ததுடன் தங்களது சொந்த முயற்சியின் மூலம் தனித்தனி கிணறுகளும் அமைத்துள்ளார்கள்.

இந்நிலைமையில் மேற்படி காணிகளிலிருந்து வெளியேறும்படி பணிக்கப்பட்டுள்ளமையால், எங்கு சென்று தஞ்சமடைவது என இக்குடும்பங்கள் அங்கலாய்க்கின்றன.

## கூடைப் பந்தாட்டப் போட்டி

(அரியாலை)

யாழ். வை. எம்.சீ.ஏ.ஸ்தாபனத்தாரின் வருடாந்த கூடைப் பந்தாட்டப்போட்டி இம்மாதம் 20ம், 21ம், 22ம் திகதிகளில் யாழ். பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ். வை. எம். சீ. ஏ.கழகம் ட்றிம்மர் கழகம், பரியோவான் கல்லூரிக்கோஷ்டி, ஓல்ட் கோல்ட் கழகம், யாழ்ப்பாணக் கல்லூரிக் கோஷ்டி, சென்பற்றிக்ஸ் கல்லூரிக் கோஷ்டி ஆகிய ஆறு கோஷ்டிகள் கலந்துகொள்ள விருக்கின்றன.

இதற்கான ஏற்பாடுகளை வை.எம்.சீ.ஏ.ஸ்தாபன விளையாட்டுச் செயலாளர் மேற்கொண்டுவருகிறார்.

வவனியாச்சம்பவம்:

## மட்டக்களப்பு சடலம் வந்தது!

(மட்டக்களப்பு)

வவனியாவில் கொலையுண்ட பூ. சிவசண்முகநாதனின் (கோகுலம்) சடலம் நேற்று முன்தினம் மட்டக்களப்புக்குக் கொண்டுவரப்பட்டது.

மட்டக்களப்பு கல்லடி வாசியான இவர் வவனியா சம்பவத்தில் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டு மரணமானார். இவரின் மனைவி ஒரு சிங்களப் பெண்மணியாவார். சிவசண்முகநாதன் ஆயுதந்தரித்தவர்களால் அன்று தாக்குண்டபோதிலும் இவரின் மனைவி அத்தாக்குதலிலிருந்தும் உயிர் தப்பினார்.


**''ஓரியன்ஸ்'' துவிச்சக்கர வண்டிகள்**

எலக்ரோ பிளேற்றட் றிம், நாஷனல் டைனமோசெற், B/90 சீற், கோபா கரியர், சைற் ஸ்ராண்ட், பெல், பம்ப், சாவிகள், ஓயில் கான் முதலியவைகளுடன்

**கறுப்பு நிறம் ரூ. 2300-00**

**கவர்ச்சியான பச்சை, சிவப்பு, நீல நிறங்களில் ரூ. 2200-00**

ரயர், ரியூப் உட்பட நூறு வீதம் யப்பானிய தயாரிப்பு.
சொற்ப தொகையே கையிருப்பில் உள்ளதால் உங்கள் தேவையை பூர்த்திசெய்யுங்கள்.

**சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்.**

ஆஸ்பத்திரி வீதி, — தொலைபேசி: 22134 — யாழ்ப்பாணம்.

# "இலங்கைத்தமிழர் விவகாரம் முழு உலகுக்கும் கவலையளிக்கிறது!"

## தஞ்சை பெருவிழாவில் பிரதமர் இந்திரா

(தஞ்சாவூர்)

"இலங்கையில், தமிழர்கள் கொல்லப்படுவது இந்தியாவுக்கு மாத்திரமல்ல உலகம் முழுவதற்குமே பெரும் கவலையைத் தோற்றுவித்துள்ளது. இதனை இப்பிரச்சனையை நாம் ஒரு முடிவுக்கு கொண்டுவர வேண்டும்" என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தஞ்சாவூரில் மாமன்னன் இராஜராஜ சோழன் முடிசூட்டு விழாவின் 1000 வது ஆண்டு விழாவின் கொண்டாட்டங்களை நேற்று தொடக்கி வைத்து உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்; "இலங்கையில் தமிழர்கள் தொடர்ச்சியாக பல துன்பங்களை அனுபவித்து வருகின்றார்கள். ஆயினும் அவர்களின் துன்பங்களை அகற்றுவதற்கு நாம் எடுத்து வரும் எந்தவொரு முயற்சியோ, செயலோ அவர்களது வாழ்க்கையை மேலும் பாதிக்கக்கூடாது. என்றார்

"இலங்கைத் தமிழர்களை பொறுத்தவரையில் அவர்களது துன்பத்தில் முழு இந்தியாவுக்குமே பங்குண்டு. இந்திய மக்களின் ஆதரவு அவர்களுக்கு என்றுமே இருக்கும்." என்று கூறிய பிரதமர் திருமதி இந்திராகாந்தி மேலும் கூறியதாவது;

"உலகம் முழுவதிலும் தமிழர்கள் பரந்து வாழ்கின்றார்கள். அவர்களது விடா முயற்சி. கடுமையான உழைப்பு என்பவற்றில் பலநாடுகள் அபிவிருத்தி யடைந்துள்ளன. குறிப்பாக இந்தியா, இலங்கை மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, மொறிசியஸ், மேற்கிந்தியதீவுகள் போன்ற நாடுகளின் அபிவிருத்திக்கு தமிழர்கள பெருபங்கு ஆற்றியியிருப்பதனை மறுக்கமுடியாது.

### விமான நிலையத்தில்

முன்னதாக திருச்சிவிமான நிலையத்தில் நிருபர்கள் மத்தியில் உரையாற்றிய பிரதமர் "இந்தியா எந்தவெரு அயல் நாட்டினதும் உள்விவகாரங்களிலும் தலையிட விரும்பவில்லை. ஆயினும் எந்தநாட்டிலும் மனித உரிமைகள் மீறப்படும் போது அதனை இந்தியா தட்டிக்கேட்பதோடு மனித உரிமைகளை மீண்டும் பாதுகாப்பதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இராஜராசேசோழன் ஆயிரமாவது ஆண்டு முடிசூட்டு விழாவினை தொடக்கி வைத்த பிரதமர் இந்திரா காந்தி 60 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கக் கிரீடத்தை இராஜஇராஜசோழன் சிலைக்கு அணிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழக முதலமைச்சர் திரு. எம்.ஜி ராமச்சந்திரன் "திருமதி இந்திரா காந்தி ஒரு மொழிக்கோ அல்லது ஒரு சமயத்துக்கோ அல்லது ஒரு மாநிலத்துச்கோ உரியவர்அல்ல. முழு இந்தியாவினதும் சொத்து அவரென குறிப்பிட்டார்.

பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்று மாலையே புதுடில்லி திரும்பினுர்.

## இலங்கைக் கப்பல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு' என்ற எண்ணெய்த் தாங்கிக் கப்பல் மத்திய வளைகுடாப் பகுதியில் நேற்று முன்தினம் ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்காகிச் சேதமடைந்துள்ளது.

இந்தக் கப்பலில் 1,2500 தொன் மசகு எண்ணெய்ஏற்றி வரப்பட்டது. இலங்கைப்பெற்றேலியக் கூட்டுத்தாபனத்துக்கும் தென் கொரியாவின் ஒரு நிறுவனத்திற்கும் இக்கப்பல் சொந்தமானது.

## இலங்கைத் தூதுவர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுவிஸ் வெளிநாடமைச்சர் திரு பியரே அவ்பேர்ட்டும் அப்போது உடனிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

நியமனப்பத்திரத்தை கையளிப்பதற்கு முதல்நாள் பத்திரிகையாளர் மகாநாடொன்றில் "இலங்கையில் தமிழர்களுக்கு ஆபத்து இல்லை" என்று திரு சில்வா தெரிவித்திருந்தார்

இதுகுறித்தே சுவிஸ் ஜனுதிபதியாலும், வெளிநாட்டமைச்சராலும் அவர் கண்டிக்கப்பட்டார்.

"தூதுவர் பதவி குறித்து பொறுப்புடன்நடந்துகொள்ள வேண்டுமென திரு. சில்வா கேட்கப்பட்டாராம்.

திரு. சில்வாகலந்துகொண்ட பத்திரிகையாளர்கூட்டம்சுவிற்சர்லாந்தில் இருந்துவரும் சுமார் இரண்டாயிரம் இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான கட்சி ஒன்றைச் சேர்ந்தவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததுஎன்று செய்தியொன்று கூறுகிறது. (கி)

## நள்ளிரவில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இவர்கள் திருமணமாகி இன்னும் 10 மாதங்கள் பூர்த்தியாகவில்லை என்று கூறப்படுகிறது.

குண்டொன்று தொழிலாளியின் குடிசை வீட்டின் பக்கத்தைத் துளைத்துக் கொண்டு சென்று கணவனின் இரு தோள்மூட்டிலும் காயத்தை ஏற்படுத்தி அருகில் கிடந்த இளம் கர்ப்பணியின் உச்சந்தலையில் பட்டு, அவ்விடத்தில் கிடந்தது. இளம் பெண்ணின் மூளை சிதறியதாகக் கூறப்படுகிறது.

கணவனுக்கு தோளிலும் காலிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளது.

கணவன் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மனைவி மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் அவசரமாக யாழ். பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டு 9-ம் வாட்டில் அனுமதிக்கப்பட்டு நேற்று மரணமானுர். வீட்டில் கண்டெடுக்கப்பட்ட குண்டு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப் பட்டது.

### யாழ். பிரஜைகள் குழு நடவடிக்கை

கரணவாயில் குண்டுத் தாக்குதலில் காயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் இருக்கும் தங்கத்துரையை நேற்று யாழ். பிரஜைகள் குழுவினர் சந்தித்தனர்.

யாழ். பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம், உறுப்பினர் திரு. ஆர். ஜெ. குணரத்தினம் ஆகியோர் சென்றிருந்தனர்.

இரவு 10-30 மணிக்கு பின்னர் குண்டு குடிசைக்குள் நுழைந்ததால் தானும் மனைவியும் பலத்த காயமடைந்ததாகவும் மனைவி 4 மாதக் கர்ப்பிணியென்றும் அவர் அக்குழுவிடம் தெரிவித்தார்.

இதேசமயம் வல்வெட்டித்துறை கொற்றையூர் கிராம அபிவிருத்தி சங்கம் யாழ் பிரஜைகள் குழுவிற்று நேற்ற கரணவாய் சம்பவம் பற்றி தந்தியொன்று அனுப்பிவைத்துள்ளது.

அத் தந்தியில் கிராமங்கள் மீது நேற்றிரவு 'ரொக்கட்' தாக்குதல் நடந்தது. இதனுல் படுக்கையில் இருந்த இளம் கர்ப்பிணி பலியானுர் அவரது கணவன் காயமடைந்துள்ளார். சில வீடுகளும் சேதமடைந்துள்ளன" என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது". (க)

## முட்டை வான் கடத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சின்னக்கடை பகுதியில்நேற்றுமாலைமுட்டை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த தனியாருக்குச் சொந்தமான வான் ஒன்று இருஇளைஞர்களினுல் கடத்திச் செல்லப்பட்டது. (க)

## பிறவுண் வீதியில் வெடித்த குண்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் நேற்று முன்தினம் பயங்கரகுண்டு ஒன்று வெடிக்கப்பட்டது.

ஏற்கனவே அங்கு எரிக்கப்பட்டு நின்ற வாகனமொன்றுக்கு இக்குண்டு வீசப்பட்டதாகக் கூறப்படுகிறது. (க)

## அமைச்சர், பிரிகேடிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தினுர்

இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் இது போன்ற சம்பவங்கள் இனி மேல் நடைபெறுது என்றும் அரச அதிபரிடம் பிரிகேடியர் உறுதியளித்துள்ளார்

இச் சம்பவம் தொடர்பாக தேசிய பந்தோபஸ்து அமைச்சருடனும், பாதுகாப்பு அமைச்சு மேலதிகச் செயலாளருடனும் யாழ். அரச அதிபர் தொடர்பு கொண்டுள்ளார்.

## மீண்டும் ராமராவ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

முதலமைச்சர் பொறுப்பை ஏற்குமாறு கவர்னர் ராமாராவை பணித்ததைத் தொடர்ந்து அவர் முதலமைச்சராக நேற்றுப் பகல் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். 9 அமைச்சர்கள் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

முதலமைச்சர் திரு. பாஸ்கரராவ் நேற்றுக் காலை பதவியைராஜினுமா செய்ததைத் தொடர்ந்து திரு. ராமராவ் அமைச்சரவை அமைக்கப்பட்டது.

சடந்த மாதம் 16-ம் திகதி மாநில கவர்னரினுல் பதவி நீச்கம் செய்யப்பட்ட திரு, ராமராவ் இம் மாதம் 16-ம் திகதி முதலமைச்சராக மீண்டும் பதவி ஏற்றுள்ளார்

## சந்தியை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கு அளித்துவரும் ஆதரவுக்கு நன்றி தெரிவிக்கின்றேன். இதனுல்தான் தொண்டமான் விடுக்கும் எந்த அழைப்பும் நான் எப்போதும் மறுப்பதில்லை".

"சுமார் 40 வருடங்களாக நாங்கள் இருவருப ஒருவரை ஒருவர் நன்றுகப்புரிந்துகொண்டிருக்கின்றேம். எனது சமூக, அரசியல் நடவடிக்கைகள் பலவற்றிலும் அவருக்கு முக்கிய தொடர்புண்டு.

'சிங்கள தமிழ் மக்களிலும் மற்றும் ஆயுதப்படையிலுள்ளவர்களிலும் பலர் படுகொலை செய்யப்படும் இக்காலத்தில் என் பிறந்தநாளை கொண்டாடுவதனையோ அல்லது விருந்துபசாரங்கள் வைப்பதனையோ நான் விரும்பவில்லை. இதனுல் தான் கடந்தஆண்டு எனது பிறந்தநாளை கொண்டாடவில்லை. அதேபோன்று இம்முறையும் எனதுபிறந்தநாளைக் கொண்டாடுவதில்லை என்று நான்முடிவு செய்துள்ளேன்.

"அடுத்தவருடம் எமக்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்குமென்று எதிர்பார்க்கின்றேன்.

"அமைதியாகவும், ஒற்றுமையாகவும் வாழவிரும்பும் தோட்டப்பகுதி மக்களை ஒரு குழுவினர் பிரிவினைச் சக்திக்குள் உட்படுத்த முயற்சிகள் செய்கின்றனர். தோட்டத் தொழிலாளர்கள் தொழில் சங்கங்களில் அனுமதியின்றி கைதுசெய்யப்பட்டல் அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படுவார்கள் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் பிரச்னைகளையும், அழிவுகளையும் ஏற்படுத்த அரசு காரணமாக இருக்கவிரும்பவில்லை. தோட்டத் தொழிலாளர்களின் தொழிற் சங்கங்களில் எனக்கு பூரண நம்பிக்கை இருக்சிறது இதனுலேயே தோட்டப்பகுதிகளை வனிக்கும் பொறுப்பை நான் அவர்களிடமே விட்டுவிடுகிறேன்.

"இந்த நாட்டிலுள்ள 90 ஆயிரம் இந்திய வம்சாவளியினருக்கு இலங்கைப் பிரஜா உரிமை வழங்க சர்வகட்சி மாநாடு முடிவு செய்துள்ளது அதேசமயம் இங்கு விசா முடித்துகொண்டிருக்கும் ஒரு லட்சம் இந்திய வம்சாவளியினரை இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும். இவை இரண்டும் ஒரே நேரத்தில் நடைபெற வேண்டும்.

"உலகவங்கி உதவியுடன் தோட்டப்பகுதி மக்களுக்கு சிறந்த வதிவிட வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளன அவர்கள் சம்பள விடயங்கள் மற்றும் பிரச்னைகளை தீர்ப்பதற்று ஒரு கமிட்டி அமைக்கப்படும். இக்கமிட்டி அவர்களின் சகல பிரச்னைகளும் தீர்வு காணும்

"தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் திரு. தொண்டமானின் அரசியல் அடிச்சுவட்டையேபின்பற்ற வேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

## தமிழின விடுதலைக்கு தம்மை முழுதும் அர்ப்பணித்தவர்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கோமகன் அமரர்வன்னியசிங்கத்தின் 25-வது நினைவு தினம் இன்றாகும்.

இந் நினைவு தினத்தையொட்டி, தமிழர் விடுதலை கூட்டணி நிர்வாக செயலாளரும் முன்னுள் கோப்பாய் எம். பி. யுமான திரு. எம். ஆலால சுந்தரம் வெளியிட்ட செய்தியில் கூறியிருப்பதாவது:

'ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களின், அரசியல் பொருளாதார விடிவிற்காக விடுதலை இயக்கத்தை தந்தை செல்வாவுடன் இணைந்து உருவாக்கி அதன் மூலம், தமிழர் பிரச்னையை உலகறியச் செய்து தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை களைந்தெறியும் சூழ்நிலையை பிறக்கச் செய்தவர் கோப்பாய் கோமகன் வன்னியசிங்கம்.

அவர் மறைந்து 25 வருடங்கள் ஆகின்றன. இந்த 25 ஆண்டுகளும். தமிழ்தினம்அனுபவித்துள்ள பல்வேறு இன்னல்களும், அவரால் தீர்க்கதரிசினமாக எடுத்துரைக்கப்பட்டவையாகும்.

"விடுதலைக்கு வழிவகுத்துத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த தியாக சீலரை இன்றைய சூழ்நிலையில் நினைவு கூருவது பொருத்தமாகும். அவர் வழிநிற்பதே அவருக்கு செய்யும் புனிதமான அஞ்சலியாகும்'. (க)

## பயங்கர சத்தத்துடன்...,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வந்தோம்.

### கடை எரிந்தது

"பருத்தித்துறை நவீன மார்க்கட்டில் எனது தந்தைக்கு ஒரு கடையிருந்தது. அதில் நானும் தம்பியும் வேலைபார்த்து வந்தோம். அண்மையில், மார்க்கட் எரிந்தபோது எங்கள் கடையும் எரிந்துவிட்டது. இதனுல் வேலையையும்இழந்தோம்.

### பயங்கரக் குண்டுச் சத்தம்

"சம்பவதினம் எல்லோரும் படுத்துவிட்டோம். வழக்கம் போல் அன்றிரவு கடற்கரைப் பக்கத்திலிருந்து பயங்கரக்குண்டுச் சத்தங்கள் காதைத் துளைத்தன. கடற்கரையிலிருந்து சுமார் இரண்டரை மைல்களுக்கப்பால் எங்கள்வீடு இருந்தது.

"சில வாரங்களுக்கு முன் அங்குள்ள வளவில் குண்டு விழுந்து மாமரமொன்றைத் துண்டாக்கி வீடொன்றைத் தாக்கியதாக அறிந்திருந்தேன்.

"என்வீட்டுக்கு எதிரில்தான் கலாவதியின் வீடு. அவர்கள் வீட்டில்தான் தம்பியும் இருந்தார்.

### தலையில் காயம்

"எங்கள் வீட்டுக்கருகில் பெரும் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து தம்பி வீட்டில் அவலக்குரல் அழுகை கேட்டது. வீட்டில் இருந்து ஓடிச் சென்றேன் கலாவதி தலையில் காயத்துடன் மயங்கி கிடந்தார். தம்பி காயத்துடன் திகைத்து நின்றுர். மாமி மற்றும் அயலார் கூடிவிட்டனர் பக்கத்து கூரையும் பனை வளையும்பிய்ந்திருந்தன. வீட்டுக்குள் குண்டுப்பாகம் ஒன்று காணப்பட்டது இரு குண்டுகள் பல இடங்களை சக்கரம் போல் துளைத்திருந்தன வீட்டிற்குள் இருந்த சைக்கிள் றிம்மையும் சிறு குண்டு துளைத்திருந்தது.

உடனடியாக வான் ஒன்றை வரவழைத்து தம்பியையும், கலாவதியையும் ஏற்றி மந்திகைஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றேம் கலாவதியின் தாயார் நாசம்மாவும் ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தார்.

மந்திகையில் கலாவதியின் நிலைமை மோசமாகியிருந்தது. அதேவானில் அவரை யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவந்து அனுமதித்தோம்" (க)

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் வரதராசப்பெருமாள்

"புலவர் மனை" நவாலியைச் சேர்ந்த வைத்திலிங்கம் வரதராசப் பெருமாள் (முன்னுள் பிரபல கணித ஆசிரியர் பல்கலைக்கழகம் - யாழ். வளாகம், யாழ். இந்துக் கல்லூரி) நைஜீரியாவில் காலமானுர். அன்னுர் தற்போது இந்தியாவில் வசிக்கும் காஞ்சனமாலையின் அன்புக் கணவரும், கனகசபாபதி, சுரபேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பல் வைத்தியர் B. S பாரதி, சிவஞானசுந்தரம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும், தங்கத் தாத்தா சோமசுந்தரப் புலவரின் பேரனுமாவார். ஈமக்கிரியைகள்பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும் நண்பரும், உற்றூர், உறவினர்களும் இத் தகவலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர் தகவல்: சி. குமாரபாரதி, திருவையாறு. மாவிட்டபுரம் 1798

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டுசெப்டம்பர் மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 00236/81 Eelanadu P O. Box 49, Telegram Eelanadu Telephone 22389 - 24126.